உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்.

# சிவகர்ணாமிர்தம்.

திருப்பனந்தாள் காசிமடாதிபதி

ஸ்ரீமத். குமாரசாமிச்சுவாமிகள்

கட்டளையிட்டருளியபடி

திருவாவடுதுறையாதீனவித்வான்

## சபாபதிநாவலரவர்கள்

இயற்றியது.

இஃது

அவர்மாணாக்கர்

சிவப்பிரகாசபிள்ளையால்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

சென்னபட்டணம்:

பார்த்திப௵ ஆனி௴ ௧௧உ.

PRINTED AT THE MADRAS RIPON PRESS.

Allrights-reserved.

கணபதிதுணை.

# சிறப்புப்பாயிரம்.

திருவாவடுதுறையாதீனத்து

## ஸ்ரீ· இராமலிங்கசுவாமிகள்

இயற்றியது.

ஏர்பூத்தபுவிமடந்தையந்தரத்தின்மேலுலகமெனவையும்மார்காற், பார்பூத்தநந்தலைமேல்விழினும்விழுமென்றஞ்சிப்பலகைநீட்டி, வார்பூத்தவவ்வுலகமெவற்றினையுந் தாங்குதல்போல்வர்னளாவிச், சீர்பூத்தபலதெங்கந்தருக்கண்மேலோங்கும்வளச்சென்னிநாட்டில். (க)

கருதுபலவிளங்குதெங்கின்வண்குருத்தின்மேலிவர்ந்துகால்கணீட்டி, மருவுபலகருமந்தியுறைதல்கௌணியர்பெருமான்வாதிற்றேற்ற, பெருகுகருஞ்சமணர்பலகழுவின்மேலிவர்ந்தமரும்பெற்றிபோலுந், திருவளர்பூம்பொழில்சூழ்ந்தபெருஞ்செல்ப்பனைசெறியுஞ்செழுந்தலத்தில். (உ)

வலமலியும்புகழ்க்காசியகிலேசன்றிருவுள்ளமகிழ்ச்சிபூப்ப, நலமலியுங்குமரகுருபரமுனிவர்பெருமான்சீர்நண்ணிமேலாம், புலமலியுந்திருமரபுமேன்மேலுந்தழைத்திந்தப் புவிமேலோங்கப், பலமலியும்புலவரெலாமுன்செய்பெரும்புண்ணியத்தின்பயனேயாகி. (௩)

அடியேன்போல்வார்பலரும்வேண்டுவனபெற்றுய்யவமர்துவாழ்வோ, னொடியாதபெருஞ்செல்வம்பெருங்கல்வியிவ்விரண்டுமொருங்குபெற்றோன், படியாவுமையாநீபல்லாண்டுவாழ்கவெனப்பலர்க்குமீவோன், முடியாவின்சொல்வாய்மைபொறைகருணைமுதனலங்கண்முழுதும்வாய்ந்தோன். (௪)

துய்யபுகழ்க்காசிமுதற்சேதுவரையுந்தருமந்துலங்கச்செய்வோன், வெய்யமறப்பகைஞருமொருபிழையுஞ்சொலமுடியாமேன்மையாளன், வையமொளிர்புகழ்க்குமரசாமிமுனிவர்கோமான்மன்றவாணன், செய்யதனிப்புராத்துவானன்குணர்த்துமிந்நூன்மொழிபெயர்ப்பாயென்றுசெப்ப. (௫)

தாங்குபுகழையாநின்றிருவருளிவ்வாறுயிற்றடையென்னேசிர், தேங்குமிதுசெயமுன்னை ளென்னபெருந்தவமுயன்று செய்தேன்கொல்லோ, பாங்குறமன்யானெடுத்தபலபிறப்புளிப்பிறப்பேபயன்மேவிற்றென், றோங்குமுளத்தடங்காது மகிழ்ச்சிமேன்மேலும்வளர்வுற்றுவிம்ம. (௬)

வாய்ந்தபுகழ்த்திருக்கோணமாமலைமுற்பலதலமுமாண்புற்றோங்கி, யேய்ந்தபெருஞ்செல்வமும்வான்கல்வியுமேன்மேலும்வளர்ஈழநாட்டி, லாய்ந்தபலவளங்களுஞ்சால்வடகோவைப்பொன்னகரிலளவில்சீர்த்தி, தோய்ந்தநான்மறைச்சைவசமயமெங்குந்தழைத்தோங்கத்தோன்றிவாழ்வோன். (௭)

எங்களாவடுதுறைச்சுப்பிரமணியதேசிகன்பாலெய்திதீக்கை, துங்கமுறமூன்றும்பெற்றவனடியானெனப்பலருஞ்சொல்லப்பெற்றோன், பங்கமறவழிவழியேயுயர்சைவக்குடியினிலுற்பவித்துமேன்மைப், புங்கவரும்புகழ்நீறுங்கண்மணியுமஞ்செழுத்தும்பொருளாக்கொண்டோன். (௮)

அரனுடையபுத்திரர்க்குமபிமானபுத்திரர்க்குமமைந்தவூரென், றரனுடையசெய்ஞ்ஞலூர்ப்பணியியற்றியறிஞருளமுவக்கப்பெற்றோன், றரனுடையநற்குமரசாமிமுனிவரனெனவேசாற்றற்கேற்ப, வரனுடையன்முனிவர்கட்குமெனிலவன்சீர்யார்சொல்லவல்லர்மாதோ. (௯)

அன்னவனேகல்வியினுஞ்செல்வத்துமமோகனெனவறியாராரம், முன்னவன்சொற்றிடவுவந்துசிவகருணாமிருதமெனமுந்நூலை, நன்னவமாங்கோவைநகர்ச்சப பதியென்றியற்பெயர்கொணாவலோனந், தென்னவனுண்மகிழ்தமிழ்ச்செய்தச்சிமுவித்துப்பெரிதுசிறந்தானம்மா. (௰)

---

கும்பகோணக் காலேஜ்தமிழ்ப்பண்டிதர்

## ஸ்ரீ. சாமிநாதையரவர்கள்

இயற்றியது.

புகழ்பூத்தமறைநாற்கும்பொதுநூலன்றெனச்சைவர்புகலைன்று, நிகழ்பூத்தசிகண்டமதங்லைப்பப்புறமதங்கணிலையாப்பட, வகழ்பூத்தழுதிலவைட்யப்பலனவைட்யப்பலனருளாலவைந்துத், திகழ்பூத்தவப்பயதிக்கிதராசயோகிமுனஞ்செய்பனுவலுள். (க)

விளங்குநலசிவகருணாமிருதத்தைத்தென்மொழியில்விளக்கென்ன, வளங்குலவுதவச்செல்வக்குமரகுருபரமுனிவன்பிற்றோன்றி, யுளங்குலவுமவன்போற்சுப்பிரமணியகுருமரியாலுயர்ச்சிமேவித், தளங்குலவுபொழிற்காசித்தருமபரிபாலனஞ்செய்தகைமைவாய்ந்தோன். (உ)

சிந்தைநெகிழ்ந்துருகவிழியருவிபொழிந்திடவுடலஞ்சிலிர்ப் பிமுக்க, ணைந்தைபிரானடிமலரைக்கடிமலர்கொண் டருச் சிக்குமியல்புமேயோன், நிந்தையிறன்பெயர்க்கேற்பச்சேய்ஞ் ஞூரரன்பணிசெய்நியமம்பூண்டோன், முந்தைவளப்பனசை நகர்க்குமாரசாமிப்பெயர்கொண்முனிவர்கோமான். (௩)

மனமகிழ்வுற்றுரைப்பவடநூல்வல்லார்வாழ்த்தெடுப்பமாண் பார்தென்சொற், பனுவறெரிபுலவரொலாம்பாராட்டத்தென் மொழியிற்பகர்ந்திட் டானு, லனைவரருமிடப்பாகத்தமலனரு ளாகமநூலரிய்விநோதன், வனைபுகழ்சேர்யாழ்ப்பாணவடகோ வைச்சபாபதிநாவலன்முன்மன்னோ. (௪)

---

சேற்றூர்ச் சமஸ்தானவித்வான்

ம-ா-ா-ஸ்ரீ

## சுப்பிரமணியகவிராசர்

இயற்றியது.

மருவியநாற்சங்கத்துளுயர்பாஞ்சசன்னியத்தின்வருமும் ம்போற், றிருவுறுநாற்குலத்துண்மேற்குலத்தில்வருமப்பபு க்கிதனுமேலோன், பெருகியபல்லுடுமதிகண்மழுங்கியவிண் த்தலரிபிறங்குமாபோ, லிருநிலத்திற்புறமதங்கண்மறைந்பு ச்சைவந்துலங்கியெழில்குலாவ.

வடமொழியிற்பன்னூல்செய்தனன்சிவமாமேல்வீடுமருவு வோர்க்குத், திடமுறவோர்நூல்வழியேசெலலமையுமெனக விஞர்செப்புங்கீர்த்தி, யுடன்மருவப்பன்னூலுட்சிவகர்ணாமி ருதமெனுமொருநூலைத்தென், கடல்வலயத்துயர்காசிமடால யத்திற்கதிபதியாங்கருணைக்கோமான். (உ)

அனையநகர்ப்பாதிமுன்னரடுத்துழைப்போர்தமையஃதே யாக்குவோன்மெய், வனைகலையாயுமவர்மனக்கலையுருக்கிமதிக்க லைபோல்வளரச்செய்வோன், நினையினேராருநேராருமிலையெ னுந்தகையினெடியோனென்றுந், தனைநிகர்தானெனும்பதி போற்றனைநிகர்தானென்னவெவருஞ்சாற்றப்பெற்றோன். (௩)

தவநிலையாம்வல்லிபடர்தருகுமரசாமிமாதவன்முன்சாற்று, சிவமுறுகட்டளைகொண்டென்றனைப் போல்வாருளத்தாய்ந்து ஒன்குதேறிச், சிவமுறத்தென்மொழியாற்செய்தச்சியற்றினான் கோவைசிறக்கவாழ்வோன், பவமறத்தொன்னூலுணர்நாவல ர்புகழ்நாவலன்சபாபதிவல்லோனே. (௪)

---

திருவாவடுதுறை

ம-ா-ா-ஸ்ரீ

## பொன்னுச்சாமிப்பிள்ளை

இயற்றியது.

நலமலியும்பனையேட்டில்வளைநுனாட்செலிற்புதுக்குநன் மைபோலப், புலமலியுஞ்சாமவேதியர்மரபின்மேன்மைதனை ப்புதுக்கவந்த, பலமலியுமப்பயதீக்கிதர்செய்பலகலைப்பெரு மைபகர்வதோவக், குலமலியும்பன்னூலிற்சிவகர்ணாமிருதமு மக்கொள்கைத்தாமால். (௧)

அனையநயசிவகர்ணாமிருதமதைப்பலகாற்கேட்டன்புமிக் குத், தனையில்பெருந்தவச்செல்வங்கல்வியெனுமுயர்செல்வந் தயங்கல்போல, நினைவரியபொருட்செல்வநிறைந்தொளிரும் பனசையில்வாழ்நிபுணனியாரும், வனையுமெழினற்குமரசாமி முனிவரர்பெருமான்வாய்மைமிக்கோன். .. (௨)

தென்மொழியின் மொழிபெயர்த்தச்சிடுவிக்கவென்றெடுத்துச்செப்பவீது, நன்மைதருமெனவியற்றிப்புகழ்படைத்தானியாவனெனினவில்யாழ்ப்பாணத், தின்மருவுவடகோவைப்பதியினன்கல்வியில்வாணியெனவேசான்றோர், சொன்மலிசீர்நாவலன்சபாபதியாமெழிற்பெயர்கொளீய்மையோனே. (௫)

சிறப்புப்பாயிரமுற்றிற்று.

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# சிவகர்ணாமிர்தம்.

---

## தற்சிறப்புப்பாயிரம்.

வாகைபாகடற்றொழுதுமாதவச்சிவஞான
யோகிசுப்பிரமணியதேசிகனையுண்ணிறீஇத்தே
மீகொளப்புநீக்கிதனருள்சிவகர்ணாமிர்தத்தை
யுகமாரத்தமிழ்ப்பெயர்த்துநாவலர்பொருட்டுரைப்பாம்.

## நடராசவணக்கம்.

ஞாலத்துநரர்க்குறுதிதன்னடிக்காட்சியிற்றானேயமையுநன்
கு, சாலப்பற்பலவேறுசெயல்வேண்டாவென்றுணர்த்தன்மா
னத்தன்னைக், கோலத்திற்குயிற்றபயடுக்கிளையொடிரும்பி
றவிதனக்குங்கோளில், சிலத்தர்புரக்குமொருபகையாய் ன்றி
லங்கொளியைச்சரணஞ்சேர்வாம்.

இச்சகத்தின்றோற்றநிலையிறுதியெதன்விளையாட்டாம்யா
தின்பாடே, துச்சிலுறைபல்லுயிர்க்கும்பிறப்பறுத்தல்சுதந்திர
மாத்தோன்றும்வேத, னச்சுதன்பூசிக்குமடிக்கமலமுடைத்தா
யுருகுக்கபபாலாமப், பொச்சமலமில்லுமையொடொன்றுசந்தா
சிவபிரமப்பொருளுட்காண்பாம்.

## நூல்வரலாறு.

அம்பிகையோடுகூடும்வடிவுடைநித்தரான
வெம்பெருஞ்சதாசிவப்பேரிறைவரேபிரமமென்றுஞ்
சம்பெரும்விபூதிலேசமேயிந்தச்சகமாமென்று
மிம்பர்மற்றெடுத்துரைப்பவைதிகரென்பமன்றே.

பாஞ்சராத்திரத்திற்சாலப்பதிந்தபுந்தியர்களானோர்
தாஞ்சிவபிரானுயர்ச்சிதன்னின்மிக்கழுக்காறுற்றுத்
தீஞ்சுவைகொழிக்குஞ்சந்தத்திருமறைகளுக்குமிக்கு
வாஞ்சைவிண்டுயர்ச்சிமேலும்வகுப்பர்தாற்பரியமன்றே.

அத்திறமறுக்குவண்ணமளப்பில்சீர்ச்சிவச்சொன்முற்றொ
டத்துவவிவேகநூலிற்சாற்றினம்விரித்திட்டந்தச்
சுத்தநூற்பொருளையெல்லாஞ்சுருக்கியீண்டுரைக்கலுற்றாம்
வித்தையின்மெலியர்தாமுஞ்சிவபிரான்மேன்மைதேற.

## நூல்.

# பூர்வபக்கம்.

அவர்தாங்கூறுமாறிது:—

"இப்பூதங்கள் எதன்பானின்று தோன்றும் தோற்றமுற்றன எதனாலுயிர்ப்புடைத்தாம் எதன்பாலொடுங்கிச் சூக்குமமாயுறையும் அதனையறிக அதுவே பிரமம்" எனவும், "வானத்தையும் புடவியையுந் தோற்றுவிக்குங்கடவுள் ஏகன்" எனவும், "இச்சகத்தோற்றமுதலியதொழிலுமெதன்கணுண்டாமது பிரமம்மே" யெனவுஞ், சுருதிகளானும் வேதாந்தசூத்திரத்தானு மினிதுதுணியப்படுஞ் சகத்தின்றோற்றமுதலியவற்றிற்குக் காரணமாகுதல் முடியபிடேகஞ்செய்யப்பட்டமன்னவற்கு வெண்கொற்றக்குடை சிறப்பிலக்கணமாதல்போலப் பரப்பிரமப்பொருட்குச் சிறப்பிலக்கணமாம். மந்திரத்தும் அருத்தவாதத்தும் ஏனைவைபவங்களைக்கூறுதன் மந்திரிமுதலியோர்க்கு மன்னவற்குங் கரிதுரகவரபூடணமுதலியன பொதுவிலக்கணமாதல்போல ஏனைக்கடவுளர்க்கும் பரப்பிரமப்பொருட்கும் பொதுவிலக்கணமாம். அங்ஙனமன்றே, "இரணியகருப்பன் முதற்கணிருந்தனன்" "இந்திர உன்னின்மிக்கானில்லை" "இந்திரன் உலகினுயர்ந்தோன்" இறந்ததற்கும் நிகழ்வதற்கும் இந்திரன் வேந்தன்" "அங்கிகடவுளர்க்கு முகமுந் தலைவனுமாம்" "அங்கி கடவுளர்க்கு முற்செல்வானு முதல்வனுமாம்." "அங்கிசோமனென்னுமிவ்விருவருங் கடவுளர்க்கரசர்" "எல்லாக்கடவுளரும் அங்கியே" "இறந்ததும் நிகழ்வதுமானசகத்துக்குச் சூரியன் ஆன்மா" என்றற்றொடக்கத்துச் சுருதிகள் காணப்படுதல்பற்றியென்பது.

இனி மந்திரங்களினும் அருத்தவாதங்களினும் ஆண்டாண்டுச் சிவனுக்கு ஏனைவைபவங்கள்கூறப்படும். அங்ஙனமாயினும், "நாராயணனொருவனேயிருந்தான் பிரமனிருந்திலன் ஈசானனிருந்திலன் அக்கினிசோமர்களிருந்திலர் இவ்வானமும் வையமுமிருந்தில" என்றற்றொடக்கத்து மகோபநிடத வசனத்தொகுதியானும், "புருடனான நாராயணன் பிரசைகளைச் சிருட்டிப்பலென்று காமுற்றான்" "நாராயணன்பானின்றும் பிரமன்பிறக்கும் நாராயணன்பானின்றும் உருத்திரன்பிறக்கும்" என்றற்றொடக்கத்து நாராயணோபநிடதவசனத்தொகுதியானும், "அண்டமுதற்கணொன்றுமிருந்திலது மூலமின்றியும் ஆதாரமின்றியும் பிரசைகளுதிக்கும் திவ்வியதேவனானநாராயணனொருவனேயிருந்தான்" என்றற்றொடக்கத்துச் சுபாலோபநிடதவசனத்தொகுதியானும், ஏனைக்கடவுளர்மாட்டுஞ் சென்று பொதுவாதற்குடன்படாத நாராயணசத்தவாச்சியனாபுருடோத்தமனே சகதினுற்பத்திமுதலியவற்றிறகுக்காரணனென்றோதப்படுதலின், அவனேபரப்பிரமப்பொருளாமென்று துணியப்படும்.

"சௌமிய சத்தேமுதற்கணிருந்தது" "இஃதுபிரமமாகவேமுதற்கணிருந்தது" "இஃதோராரன்மாவாய்முதற்கணிருந்தது" என்றற்றொடக்கத்தனவாக ஏனைச்சுருதிகளிற்போந்த காரணவாக்கியங்களிற் கேட்கப்படுங் காரணத்தையுணர்த்துஞ் 'சத்து' 'பிரமம்' 'ஆன்மா' வென்னும்பொதுச்சொற்கள், "அங்கிசோமர்பொருட்டுப் பசுவை யாலம்பனஞ்செய்க" என்று விதிவாக்கியத்திற் படிக்கப்பட்டதூஉங் கோமுதலியவற்றிற்கெல்லாம் பொதுவானதூஉமாகிய 'பசு' வென்னுஞ் சத்தஞ் "சாகவபையது" என்னு மந்திரத்திலோதப்பட்ட சாகத்தின்கண்முடிதல்போலச் "சாகந்தானேமந்திரவெழுத்

தான்" என மீமாஞ்சையாருமத்தியாயத்திற் கூறப்படுமிழுதி யதிகரணநியாயத்தினானே புருடோத்தமன்கண்முடிபெய்துமென்பது.

அற்றேல், அதர்வசிரசில் "நானொருவனே முதற்கணிருந்தேன்" என்றற்றொடக்கத்தனவாகக் கடவுளைநோக்கிச் சிவனோதிய வசனந்தானும், "எப்பொழுது இருளிருந்தது அப்பொழுதுபகலில்லை இரவில்லைச் சத்தில்லை அசத்தில்லைச் சிவனொருவனேயிருந்தான் அஃது அக்கரம் அஃது சூரியனினும் பெரிது அதன்பானின்றும் அறிவு முன்னர் உதித்தது" என்னுஞ் சுவேதாச்சுவதரோபநிடதமந்திரத்தானும், இருண்மாத்திரமிருந்த சிருட்டியின் முதற்பொழுதிற் சிவன்முழுமுதலாய் நிலைபெறுதல் கூறப்படும். "விச்சுவாதிகனும் பேரிருடியாயுமுள்ள எவ்வுருத்திரன் கடவுளர்க்கு முதல்வனை இரணியகருப்பனை அவன்றோன்றும்பொழுது நோக்கினன் அக்கடவுள் எம்மை நல்லறிவுடையமாகச்செய்க" என்னுந் தைத்திரிய மந்திரத்தான் அனைத்திற்குமுதல்வனை இரணியகருப்பனையுஞ் சிருட்டிக்குங்கருத்தாவாக ஓதப்படுதலின், சிவன்முழுமுதல்வனாதல் உரைக்கப்படும். அதர்வசிகையினும் "இப்பிரமன் விண்டு உருத்திர னிந்திரனென்பார் பிறக்கின்றனர்" எனப்பிரமன் முதலியோர்க்குக்காரியத்தன்மைகூறிக், காரணன்றான் றியானிக்கற்பாலன் ஐசுவரியமனைத்தினையுமுடையனும் அனைத்திற்குமீசனுமான சம்பு ஆகாயநடுவிற்றியானிக்கப்படும்" என்னும்வாக்கியத்தினாற்சிவன்முழுமுதலாதன் றோகவேகூறப்படும். ஆகலின், காரணவாக்கியங்களெல்லாஞ்சாகபசுநியாயத்தானேபுருடோத்தமன்கண்முடிபெய்துதல் யாங்ஙனந்துணியப்படுமெனின்;—கூறுதும்:"கடவுளர் சுவர்க்கலோகத்தையடைந்தனர்;அவர் நீர்யாவொன்றுருத்திரனைவி(னவி)

யினார்; அவனிருப்பானாயினன்: நானொருவன் முதற்கணிருந்தனனே இருக்கின்றனன் இருப்பல் என்னின் வேறானொருவனுமில்லை என்று; அவனந்தரத்தி னந்தரத்தைத் தலைக்கூடினான்; திக்கினந்தரத்தையுந் தலைக்கூடினான்; அப்பெற்றியனான நான் நித்தியன்; அநித்தியன்; நான்பிரமனாகேன்; நான்பிரமனாவேன்; நான்கீழ்த்திசையி லுள்ளேன்; நான் மேற்றிசையிலுள்ளேன்" என்றற்றொடக்கத்தனவாக விங்ஙனமன்றே அதர்வசிரசிற் கேட்கப்படும். ஈண்டு உருத்திரன் 'முழுமுதலாகவும் எல்லாமாகவும் இருந்தே' னென்றிறுத்தது தன்னைக்குறித்தன்று. பின்னர்க்குறித்த தியாதினையோவெனின்;— "நான் மனுவாயினேன் சூரியனானேன்" என வாமதேவமுனிவன் றனக்கந்தரியாமியாய்நிற்கும்பரமான்மாவைக் குறித்துக்கூறிய வெல்லாமாந்தன்மைபோலத் தனக்கந்தரியாமியாய் நிற்கும்பரமான்மாவைக்குறித்தே யென்க. அற்றாகலினன்றே பரமான்மாவுக்கன்றோ காரணத்தன்மை முதலியன வுண்மை வெளிப்படையாம்; 'நான்முதற்கணிருந்தனன்' என்றற்றொடக்கத்துரைகள் உனக்கியாங்ஙனம் பொருந்துமென்னு மாசங்கையை யொழித்தற்பொருட்டு, 'அவனந்தரத்தினந்தரத்தைத்தலைக்கூடினான் திக்கினந்தரத்தையுந் தலைக்கூடினான்' என்றிவ்வுருத்திரவசனமெழுந்ததென்பது.

புத்தியையுறைவிடமாகக் கோடலொன்றோ, அந்தரியாமிப்பிராமணத்திற்கூறியாங்கு, அனைத்தினுநிறைந்த பரமான்மாவுக்குத் தேவர்மக்களையுணர்த்தும்பதங்களுக்குப்போலப், பதங்களனைத்திற்கும்பொருளாதலும் ஒப்பப்படுதலின், முன் வாக்கியத்திலுள்ள 'நான்' என்னும்பதம் தன்னகத்துள்ளபரமான்மாவையுணர்த்திப் பிரகிருதமாதலொன்றோ, இரண்டனுளொன்றானே, 'அவன்' எனப்பரமான்மாத்தற்பதத்தா

லுபசரிக்கப்படும். அதனானே, அவன்—பரமான்மா,—அந்தரத்தின்—பிராணன்முதலிய வற்றினும்,—அந்தரம்—உள்ளானதன்றன்மாவையும்,—திக்கின்— திக்கனைத்தினுமுளவான பொருட்டொகுதியையுற்ற,— அந்தரம் – உயிர்த்தொகுதியையும் அந்தரியாமித் தன்மையாற்றலைக்கூடினனென்பது, அதன்பொருளாம். ஆகவே, அக்கருத்துப்பற்றியே முழுமுதற்றன்மைமுதலியவற்றை எனக்குக்கூறினேனென்பது கருத்து. இந்தவாக்கியம் உருத்திரனனைத்திற்குமந்தரியாமியாதலைக்கூறும், முன்வாக்கியமும் அவனுக்கேமுழுமுதற்றன்மை முதலியவற்றையோதும், என்றமோவெனின்;-என்றும்; என்னை? அங்ஙனங்கூறின், இஃதுருத்திரவாக்கியமாகலின் "நான்றலைக்கூடினேன்" எனப்பிரயோகிக்கற்பாலதாமாகலானென்பது.

'என்னின்வேறுயிறனொருவனுமில்லை' என்பதன்பின்னர் 'என்று' என்னும்பதம்வருதலானே உருத்திரவாக்கியமுற்றுதலின், 'அவனந்தரத்தினந்தரத்தைத்தலைக்கூடினான்' என்றற்றொடக்கத்தன சுருதிவாக்கியமென்றே சொல்லற்பாற்றெனின்;— அற்றன்று, 'தலைக்கூடினான்' என்பதற்குப் பின்னும், "அப்பெற்றியனை நான் நித்தியன் அநித்தியன்" என்றற்றொடக்கத்துச் சுருதிவாக்கியானுவிர்த்தியானே அதற்குமுடிபெய்தாமையின், அங்ஙனங்கொள்ளாதவழி உருத்திரவசனம் இடையே சுருதிவாக்கியத்தாற்பிளவுபட்டு மறித்தும் 'அவனிறப்பானாயினன்' எனவேண்டப்பட்டத்தியாகாமப்பிரசங்கம் வருதலினென்க.

"என்று" என்னும்பிரயோகந்தானும், அவனந்தரத்தினென்பனதமுதலாகவுடையவாக்கியத்தோடன்னுவயமுற்றுப் பரமான்மாவுட்புகுந்தானென்னுமேதுவானே *நானொருவன்மு

தற்கணிருந்தேன்' என்றற்றொடக்கத்தனவாக வெடுத்தோதி ற்றென்று, எதுப்பொருட்டாய்ப்பொருத்தமுடைத்தாம். முழுவுபொருளாங்கால், உருத்திரவாக்கியமனைத்திற்குமிறுதியி லதற்கன்னுவயமுண்டாகற்பாற்று, அத்தியாகாரத்தினுந் தூரான்னுவயஞ் சிறப்புடைத்தாகலின்.

இங்ஙனமிவ்வுபநிடதத்து முழுமுதன்மை, அனைத்துமாந்தன்மை, வீட்டினை விரும்புவோராலுபாசிக்கப்படுந்தன்மை முதலியவற்றையுடையனாகச்சொல்லப்படும்பரம்பொருள், உருத்திராந்தரியாமியாகிய நாராயணனேயாம்; "இவன் பூதங்களனைத்திற்கு முள்ளுயிராவோன் பாவத்தையொழித்தோன் திவ்வியதேவன் ஏகன் நாராயணன்" எனச்சுபாலோபநிடதத்தில் அயனனைத்திற்கு மந்தரியாமியாதல் ஓதப்படுதலானும்,"அளவிலபேரொளிப்பகவனுஞ்சிவனுக்கச்சுதனுண்மாவாம்" என்று பாரதத்திற் கர்ணபருவத்தில்அவன் உருத்திராந்தரியாமியாதலைச் சிறந்தெடுத்தோதுதலானுமென்க.

'எப்பொழுதிருளிருந்தது' என்றெழுந்த சுவேதாச்சுவதர மந்திரந்தானுங் குறித்தவோர்பொழுதையிருளின் அனுவாதமாகலின், அது தன்னை யறிவுறுத்தும் "அவ்வியத்தம் அக்கரத்தினிலொடுங்கும் அக்கரம் இருளிலொடுங்கும் இருள் பரதேவன்பாலொடுங்கியொன்றும்" எனவரூஉஞ்சுபாலோபநிடதவாக்கியத்தையவாய்நிற்கும், அனுவாதம் புரோவாதத்தையவாய்நிற்றலியல்பாகலின். இம்மந்திரந்தானுந்தன்னாலவாவப்பட்ட புரோவாதத்தோடுமாறுபடாமைப்பொருட்டு, ஆண்டிருளை யதிட்டிப்போனெனக் கூறப்பட்ட நாராயணன்பாற்றானே முடிபெய்தும். அஃதேல்,"இருளொன்றே யாதிக்கணிருந்தது அதிப்ரமனாலேவப்பட்டு விகாரமெய்திற்று" என

றெழுந்த மைத்திராயணச்சுருதிவாக்கியம் ஈண்டுப்புரோவாத மாதற்கு இயை புடைத்தாகுகவெனின்;—அற்றன்று, பொதுவாற்றானெழுந்த வஃதுஞ் சாகபசுநியாயத்தானே சுபாலோபநிடதத்தோதிய சிறப்புப்பொருளின்கண்முடிபுற்றுச் சமானமாகலினென்க. இங்ஙனமாகலின், "சிவனொருவனே" யெனவரும்வாக்கியத்தின்கணுள்ள'சிவ'சத்தம், மற்றொருகடவுளை உணர்த்துஞ்சொல்லாயினும், சுபகரனெனக் காரணக்குறியாற்றான், இடுகுறியாற்றான், ஆகுபெயரானே நாராயணன்கட்டானேநிலையுறுத்தற்பாற்று. "இப்பூதங்களெல்லாம் பிராணன்பாலன்றே யொடுங்கும் பிராணன்பாலன்றே தோன்றும் இப்பூதங்களெல்லாம் ஆகாயத்தின்கண்ணன்றே யொடுங்கும் ஆகாயத்தின்கண்ணன்றேதோன்றும்" என்றற்றொடக்கத்து வாக்கியங்களிலுள்ள தேற்றப்பொருட்டான "அன்றே"யென்னுஞ் சொல்யாப்புப்பற்றிக் காரணத்தன்மையின் அனுவதிப்புப் புரோவாதத்திற்கேற்றவாற்றானே நாராயணவிடயமாதல்கொண்டு, ஆண்டுள்ள பிராணன் ஆகாயமுதலிய அசேதனப்பொருள்களை யுணர்த்தும் பதங்களுக்கும் இடர்ப்பட்டு நாராயணன்பால் உரையொப்பிக்கோடும்; மற்றொருகடவுளைக் குறிக்குமேனும், அணித்தாயிருக்குஞ் 'சிவ'சத்தத்திற்கு அவன்பாலுரையொப்பிக் கோடற்கட் பாரமென்னை? இனி "இவ்வாறன்றி," "ஸர்வன் சர்வன் சிவன் றாணு"—வென விண்டுவுக்குரிய ஆயிரநாமத்துப் படிக்கப்படுதலின், 'சிவ' சத்த நாராயணன் பெயராமெனக்கொண்டு அதற்கு அவன்பால் உரைகூறலுமாம்.

"உருத்திரன் ஒருவனே இரண்டானானில்லை; பேரிருடியானவுருத்திர னுலகின்மேம்பட்டோன்;" "மாயையையுடைய மகேச்சுரனை" "ஈசுரர்க்கெல்லாமுதல்வனான மகேச்சுரனை"

ன்றதற்றொடக்கத்தனவாக முன்னும் பின்னும்வருமந்திரங்க
ளையாராயும்வழிச் சுவேதாச்சுவதரோபநிடதமுழுதுஞ் சிவபர
மாதல் வெளிப்படுதலின், அதனிடைப்பட்ட "அப்பொழுதி
ருள்" என்னுமிம்மந்திர நாராயணவிடயமாமென்றல் பொ
ருந்தாதாலோவெனின்;—அற்றன்று, "நான்மகானென விந்த
ப்புருடனையறிவேன்" என்றதற்றொடக்கத்துப் புருடசூத்ரமந்
திரங்கள்பல இவ்வுபநிடதத்திற்படிக்கப்படுதலின், அதனானு
ணர்த்தப்படும்பொருளான நாராயணனுக்கு இதன்கண் ரூப
கமுண்டாதலின், அவனேயிதற்கும்பொருளாமென்று துணிய
ப்படுதலின், இரண்டுபநிடதங்களானுங்கூறப்படும்பரம்பொ
ருள்கள் தம்முள்வேறுமெனக்கொள்ளின் இரண்டினும் "
டிதற்குவேறுநெறியில்லை" யெனக்கூறுதல் வழுவாதலின், இர
ண்டும் ஒன்றையொன்று விலக்கல்பற்றி வீட்டினைத்தலைக்கூ
டுமுபாயத்தைத் துணிதல் கூடாமையினென்க.

இவ்வுபநிடதமந்திரப்பிரததியபிஞ்ஞைபற்றிப் புருடசூத்த
மே சிவபரமாகற்பாற்றெனின்;—அற்றன்று, "ஆயிரந்தலை
யையுடையான்புருடன்" என்றுபக்கிரமத்திற்றனே "புருவெ
னுஞ்சரீரத்திடைக்கிடத்தலினாற் புருடன்மற்றரிமுப்பாலெ
ற்றுத், திரிவின்மூப்பாலென்றொற்றதாய்வழங்குந்திகழுமிப்
பகவச்சொன்மான, வுரைபெறும்புருடசத்தமும்பழையோனு
ய்நனியொளிர்வாசுதேவப், பெரியவன்றனக்கிங்கியற்கையா
ன்வழங்கும் பெருவழக்குடைத்தென்பவானேரோர்." என்
றதற்றொடக்கத்துப் புராணவசனங்களாற்பெறப்படு நாராயண
னையுணர்த்தும் புருடசத்தங்கூறப்படுதலானும், புருடசூத்தத்
திலோதப்படுமாபுருடனையறிவித்தல்பற்றி அதனேடொருவா
க்கியத்தன்மையடைந்த "அப்புக்களிலிருந்து தோன்றினன்"
எனவருமடுத்தவனுவாகத்தினிறுதியில் "கிறீயும் இலக்குமியும்

பத்தினிமார்'' என்று இலக்குமிக்குப் பதியாந்தன்மையைக் குறிக்குமிலிங்கங்கூறப்படுதலானும், சந்தோகப்பிராமணத்தில் "இதுவிண்டு" 'விருக்கத்துக்கும் இந்திரனுக்கும்' 'சுக்கிரனையொப்பக்காவியஞ்சொல்வோன்" எனவருவனவும் இறுதிக்கண்ணுள்ளவராகசூத்தமும்*புருடவிரதங்களும் இவ்வைணவ சங்கிதையாம் இதனையோதுவோன்விண்டுவையுவப்பிக்கும்'' என்றுவைணவசங்கிதையிற்சேர்த் தோதப்படுதலானும், அதர்வணவேதத்திற்பதினெண்வகைமாசாந்திப்பிரகரணத்தில் அவ்வக்கடவுளர்க்குரியசாந்திகளில்அவ்வக்கடவுளர்மந்திரங்களைப் பிரயோகிக்கும்வழி "விண்டுசம்பந்தத்திற் புருடசூத்தம்" என விண்டுவுக்குரிய சாந்தியிற் பிரயோகிக்கப்படுதலானும், சௌனகபோதாயனமுதலியமிருதிகளில் நாராயணனாராதனையிற் பலவாறுவிநியோகிக்கப்படுதலானும், விண்டுபுராணமுதலியவற்றிற் புருடசூத்தத்தின்பொருளைத்தழுவிநாராயணன்றுதிவரக்காண்டலானும், "நாராயணமெனப்படும் புருடசூத்தந்தானே எசமானன்வழிபடும்" எனவும் மேல் "இருவகை நாராயணங்களால் வழிபடுக" எனவும்வருங்கற்பசூத்திரங்களில் நாராயணநாமத்தானே விவகரித்தலானும், புருடசூத்த நாராயணபரமாத்துணியப்படுதலின், அனேகபிரமாணங்களை இடர்ப்படுத்துதல் செல்லாமையின், அம்மந்திரப்பிரத்தியபிஞ்ஞைபற்றி இவ்வுபநிடதமே நாராயண பரமாதல் பெறப்படுதலாமென்க.

அற்றேல், இவ்வுபநிடதத்தில "இந்த மகானாகிய புருடனை யானறிவன்" "எவனினும் மேலானதுங் கீழானதுஞ் சிறிதுமில்லை" யெனவருமிரண்டுமந்திரங்களையுங்கூறியபின், "அதனினெது சிறந்தது அஃதுருவ மில்லது நோயில்லது எவரிதை

* புருடவிரதமெனினும்புருடசூத்தமெனினுமொக்கும்.

அறிகுநர் அவர் வீட்டினைத்தலைப்படுவர் அல்லாதார் துன்புறுவர் யாங்கணுமுகங்களுந் தலைகளுங் கழுத்துக்களுமுடையானும் அனைத்துயிர்களி னிருதயகுகைகளிலுறைவோனும் யாண்டுநிறைந்தோனும் பகவனுமாயிருத்தலிற்சிவன் சர்வகதன்" எனனுமந்திரங்கூறுதலானே புருடசூத்தத்திற் பெறப்படு நாராயணனினுஞ் சிறந்தானாகச் சிவனுக்கு மேம்பாடு கூறுதலே யிவ்வுபநிடதத்தின் தாற்பரியமாகத்துணியற்பாற்றெனின்;— அற்றன்று, முதற்கண் "நானறிவேன்" என்னுமந்திரத்தானே நாராயணனையறிதலே வீட்டிற்கேதுவெனவும் 'எதனினுஞ் சிறந்ததில்லை' என்னுமடுத்தமந்திரத்தானே 'அவனினுஞ்சிறந்ததில்லை' யெனவுங்கூறுதலான், அதற்கடுத்த மந்திரத்திற்கு அதனோடுமாறுபடத்தாற்பரியங்கோடல் பொருந்தாமையின், உபக்கிரமோபசங்காரங்களுக்கு விரோதம்வருங்கால் விரோதிக்குமுற்படுமுபக்கிரமம் வலியுடைத்தென்பது "வேதந்தானேமிகுவரவிற்றூன்"எனப்பூர்வதந்திரத்திலோதுதலாற்போதருதலின்,இறுதிக்கணோதிய 'அதனினுமேது சிறந்தது' என்றற்றொடக்கத்துமந்திரங்களுக்கு முதற்கட்கூறியதனைத்தழுவியே பொருள்கூறற்பாற்றாகலினென்க. ஆகவே, ஆண்டுள்ள வடுத்தமந்திரமுநாராயணபரமேயாம். "ஆதலிற்சிவன்சர்வகதன்" என்னுமந்திரத்திற்குப்பின்னும் 'ஆயிரந்தலைகளையுடையன் புருடன்' எனப்புருடசூத்தமந்திரங்கூறப்படுதலானும், "இவன்சத்துவகுணத்தைத் தொழிற்படுத்தும்" எனச்சத்துவகுணவுபாதியென்னு மிலிங்கங்கூறப்படுதலானுமென்க.

ஆண்டு 'அதனின்' என்னுஞ்சொல்லானே "அந்தப் புருடனலிந்தச்சகமெல்லாம் வியாபிக்கப்பட்டன" எனவருமுன்னைமந்திரவிறுதிக்கண் எழுவாய்வேற்றுமையானுணர்த்தப்படும் விசுவத்தைவாங்கி, அதனினுஞ் சிறப்புறுதல் இயைபுடைய

நாராயணனுக்குக்கூறப்படும். அல்லதூஉம், 'அதனின்' என்பது ஏதுப்பொருட்கண் வந்ததெனக்கொண்டு, எக்காரணத்தானே அவனால் எல்லாம் வியாபிக்கப்பட்டன, அக்காரணத்தால் ஏதுமிகவுயர்ந்ததென்று, மந்திரத்தொடர்ச்சிபொருந்துமெனினுமாம். ஏனை மந்திரங்கடோறும்வரும் 'உருத்திரன்' முதலியபதங்களும் இங்ஙனஞ் 'சிவ' சத்தத்திற்குக்கூறிய நியாயத்தானே நாராயணனையுணர்த்துவனவேயாம்.

இவ்வாறு இவ்வுபநிடதத்திலுள்ள மந்திரமெல்லாம் நாராயணபரமாகவே, "காரணாதிபர்க்கெல்லாம் அதிபதியாகியவனே நாரணன்" என்னுமற்றைமந்திரந்தான் சிவனுக்குக்காரணத் தன்மையைப் பெறுவிக்குமேயோவென்னு மாசங்கைக்கு இடமின்மையுணர்க.

'எவன்றேவர்க்கெல்லா முதல்வனான இரணியகருப்பனை' யெனவருஞ்சைத்திரீய மந்திரமும் நாராயணபரமேயாம், முன்னுள்ள 'யது' பதத்தாலனுவதிக்கப்படுமிரணியகருப்பனுக்குக் காரணமாந்தன்மை 'நாராயணன்பானின்றும் பிரமன்றோன்றும்' என்றற்றொடக்கத்துப்புரோவாதத்திற்கேற்ப அவன்விடயமாதல் பெறப்படுதலின்.

அஃதேல், "அணுவுக்கணு" வென்றுபநிடதத்துபக்கிரமத்திலெழுந்த மந்திரத்தில் "தாதுப்பிரசாதத்தாற் பிரமமாகவு மீசனையுமறிக" வென 'ஈச' சத்தங்கேட்கப்படுதலானும், "எதுவேதத்தின் தொடக்கத்திலுள்ளது" எனவரும் அதனிறுதிக்கண்ணுள்ளமந்திரத்தில் 'மகேசுர' சத்தங் கேட்கப்படுதலானும், உபக்கிரமவுபசங்காரங்கள்பற்றி அனுவாகமே சிவபரமாகத் துணியப்படுதலின், இடைப்பட்ட இவ்வொருமந்திரமாத்திரம் விண்டுவிடயமாதல்யாங்ஙனமெனின்;—கூறுதும்:—'ஈச' சத்தம் ஐசுவரியகுணவிசிட்டனை யாவர்மாட்டும் பிரயோகி

MAHAMAHOPADHYAYA
DR U.V. SWAMINATHA IYER LIBRARY.

க்கப்படுதலின ஓரிடத்துநிலைபெறின்றும். 'எது வேதத்தின் றொடக்கத்திலுள்ளது' எனவருமந்திரமும் பொருட்பெற்றியானே நாராயணபரமாம். அதன்பொருள் முன்னர்க்கூறுதும். "மறைபிரணவத்திற்றோன்றியொடுங்குமற்றதன்பான்மான்ட வறிவுடைமுனிவ" என்னுமிருதிவசனத்தானேவேதங்களின்றோற்றவொடுக்கங்களுக்கிடமாய்அதன்எழுவாயினுமிறுவாயினு நிலைபெறு முயிராயுள்ளது பிரணவம். "அகாரமன்றே வாக்குக்களனைத்தும்" என அகாரத்துக்கு வாக்கனைத்திற்கும் பிரகிருதியாதல் ஓதப்படுதலின், பிரகிருதியான அகாரத்திலொடுங்கி அதன்மயமாய் பிரணவத்திற்கு, எவன் பரன்— 'இதம்பரம்' 'தற்பரம்' என்றற்றொடக்கத்துப்பிரயோகங்களி (பரசத்தம்பொருளையுணர்த்துதலின்) எவன்பொருளாகின்றான்,—அவன்பரமேசுரனும்—வாக்கனைத்தின்சாரமாயும் எல்லாவேதங்களின்றோற்றவொடுக்கங்களுக் கிடனுமாயுள்ள பிரணவத்திற்குக்காரணமாதல்பற்றிச் சத்தங்களனைத்திற்கு மேலான அகாரத்தின் பொருளாயுள்ளான் உலகிற்கெல்லாம்பெரியனாவானுமென்பது துணிபாம். சொற்களனைத்திற்கு மேலாய்ச்சிறக்கும் அகாரப்பொருளாதற்குரியானுக்குப் பொருள்களனைத்திற்கு மேலாய்ச்சிறந்தானாதல்வேண்டுமென்று நியாயத்தானே, அகாரப்பொருட்குப் பேராண்டகைமையைக் கூறுமிம்மந்திர நாராயணன்பாற்றானே முடிபெய்தும்.

"அகாரம் விண்டுவை யறிவுறுத்திடும்" என்னுமிருதிவசன முண்மையின், இந்த அனுவாகமுழுது நாராயணபரமேயாம். அற்றாகலினன்றே இதனகத்துள்ள "அதனுள்ளே எதுவுறையும் அதுவுபாசிக்கத்தக்கது" என்னுந்தகரவுபாசனைநாராயணனைத் தெய்வமாகவுடைத்தாயதூஉம், அதுபற்றி அடுத்தவனுவாகத்திற் "றாமரைமொட்டுப்போல" என்றற்றொடக்கத்து

வசனங்களானே தகரபுண்டரீகவியல்பையுணர்த்துவழி "ஆ
யிரந்தலைகளையுடையான்" என்றெடுத்து நாராயணன்மகிமை
விரித்ததூஉமென்க.

"காரணன்றான் றியானிக்கற்பாலன்" என்னுமதர்வசிகாவாக்கியம் தான் ஒன்றன் காரணத்தன்மையைவிதிக்கவெழுந்ததன்று; மற்றென்பொருட்டெழுந்ததெனின்;—"எவனறியானிக்கப்படும்" என்றுபநிடதத்தின்றொடக்கத்திலெழுந்த வினாவிற்குவிடையாகத்தியானத்தைவிதித்தற்பொருட்டெழுந்ததென்க. அவ்வாறு சுபாலோபநிடதமுதலிய பிறசுருதிகளில் நாராயணனுக்குக்காரணத்தன்மைதுணியப்படுதலின், 'காரண' சத்தத்திற்கு அவனின்றியமையாப்பொருளாய்; பொருளாகவே, அதனோடொருபொருள்படப் பிரயோகிக்கப்பட்ட 'சம்பு' முதலியசத்தங்களும் அவன்றன்னையே யுணர்த்துவனவாம். "பிரமன் விண்டுவுருத்திரனிந்திரனென்பார் பிறக்கின்றனர்" என்புழி, 'விண்டு' வென்னுஞ்சத்தம் பத்தர்க்கெளிதாம்பொருட்டுக் கொள்ளப்பட்டதோரவதாரவிசேடப்பொருட்டாய்ப் பொருத்தமுடைத்தாம்.

இவ்வாறு சுருதிகளில் நாராயணனை யொழித்தொழிந்தகடவுளர்க்குக் காரணத்தன்மைபேசப்படாமையானும், நாராயணனுக்குச் சுபாலோபநிடதமுதலியவற்றிற் சிருட்டிப்பிரளயரூபநிரூபணப்பிரகரணங்களிலேபெருவழக்குடைய 'நாராயண' சத்தத்தாற் காரணத்தன்மை பேசப்படுதலானும், காரணவாக்கியங்களெல்லாம் அவன்கட்டானேமுடிபெய்துமென மேற்கூறியது இயைபுடைத்தாமாறுகாண்க.

அற்றேல், சைவ இலிங்கமுதலியபுராணங்களுள் ஓதப்படுஞ்சிருட்டிப்பிரகரணங்களிலே சிவன் சகத்திற்குக்காரணனாதலை மிகுத்தெடுத்துரைக்கக் காண்டுமெனின்;—அஃதுண்மை

யாயினுங்கொள்ளற்பாற்றன்றாம்; என்னை? தாமதபுராணங்களிற் கூறப்படுதலின். புராணங்களையியற்றினோன் நான்முகனன்றே; அவன்சிலகற்பத்துச் சத்துவகுண மிகுதிப்பாட்டையுஞ் சிலகற்பத்து ராசதகுணமிகுதிப்பாட்டையுஞ் சிலகற்பத்துத் தாமதகுணமிகுதிப்பாட்டையு முடையனென்றான். தன்னையுற்றகுணமிகுதிப்பாட்டாற் சாத்துவிகம் இராசதந் தாமதமெனப்பெயர்பெற்றுத் தனக்கொவ்வோர்பகலான அக்கற்பங்களில் வைணவபுராணங்களையும் பிரமபுராணங்களையுஞ் சைவபுராணங்களையு மியற்றினன். ஆகலின், புராணங்களும் அவ்வியற்றியான்குணத்திற்கியையச் சாத்துவிகம் இராசதந் தாமதமெனக்குறியீடுபெற்றன. இங்ஙனந்தமோகுணத்தாற்றிவுற்ற இருக்கையுடையோனாற் கூறப்படுஞ்சிவபுராணத்தோசப்பட்டன, சாத்துவிகபுராணத்தோடுமாறுபடும்வழிக், கொள்ளப்படாவாம். இவையெல்லாம், "சங்கீரணஞ்சாத்துவிகம் இராசதந் தாமதம்" எனக்கற்பங்களை நான்காகவகுத்தெடுத்துக்கொண்டு, "எப்புராணமற்றெக்கற்பத்தேயயன், செப்பந்ன்றதுபண்டதன்சீர்தாத், தப்பறப்புகலப்படும்" என்றுநிறுத்தி, "வயங்குமங்கிசிவன்பெருமான்மிய, மியம்புதாமதத்தெய்திடு நான்முகத், தயன்றன்மேன்மையிராசதத்தாகிடு, நயங்கொள் வாணிபிதிர்புகழ்நாடினே; விளக்கமெய்துஞ்சங்கீரணமிக்குன், களக்கரும்மரிமான்மியமாக்கமாங், களக்கநீங்குமச்சாத்துவிகத்துவீ, டுளக்கண்யோகசித்திசேருறுவரே." என்றிங்ஙனம் வருமற்சபுராணவசனங்களினுட்கோளாக வோர்ந்துகொள்ளற்பாலவாம்.

"எப்புராணமற்றெக்கற்பத்து" என்ற வசனத்தானேபிரமனால் அவ்வக்கற்பங்களிற் கூறப்பட்ட புராணங்களுக்கு அவ்வக்கற்பவிடயத்தன்மை போதருதல்பற்றி ஒருகற்பவிடய

தன்மையெய்திய புராணங்களுக்கு மறுபெருகற்பத்திலோ
படுதலுண்டென்னுஞ் சங்கையை யொழித்து, "வியங்கும
லகிசிவன்பெருமான்மிய" மென்றற்றொடக்கத்து வசனங்க
ளானே சைவமுதலியபுராணங்களுக்குத் தாமதமுதலியகற்ப
விடயத்தன்மைபேதருவித்தலின், அவைதாம் பிரமனற் கு
ணமுதலியகற்பங்களிற் கூறுமே யோதப்பட்டனவென்பதுபெ
றப்பட்டது. பெறப்படவே, புராணங்களுக்குச் சொல்லியா
ன்குணத்திற்கேற்ப வன்மைமென்மைவேறுபாடு உளவாதல்
தானேபோதரும்.

அற்றேல், புராணங்கள் தாமதமுதலியகற்பங்களில் ஓதப்ப
ட்டனவென்பதுகொண்டு, ஓதியானுக்குக்குணவேறுபாடுபெ
றப்படுதல் யாங்ஙனம் போதரும்? கற்பங்கள் தாமதமுதலிய
வாக வேறுபடுதல்பற்றிப் பிரமன் அவ்வக்குணத்தனாய் மாறு
படுதல் எடுத்துக்காட்டிய சுலோகங்களிற் பெறப்படாமையி
னெனின் ;—அற்றன்று, "சங்கீரணஞ் சாத்துவிகம்" என்
பதை முதலாகவுடைய கற்பவேறுபாடு கூறுஞ்சுலோகத்தி
ற்கு முன்னே கற்பங்களிற் பிரமனுக்கு அவ்வக்குணமிருதல் க
ருத்தாகலானும், அங்ஙனம் வேறுபட்ட வவ்வக்கற்பங்களில்
அவனாலோதப்பட்டனவாயும் ஒருவரோடொருவர் மாறுபடுங்
கடவுளரினுயர்ச்சியைக் கூறுவனவாயுமுள்ள புராணங்கள்
ஒருங்கு பிரமாணமாதல் செல்லாதென்றுசங்கை நிகழ்வுழி,
அவற்றுட்கொள்ளற்பாலன இவை தள்ளற்பாலன இவையெ
ன்பதுணரும்பொருட்டு ஓதியான் குணத்திற்கேற்ப வன்மை
மென்மைகளைக்குறித்தல்பற்றிப்பயப்பாடுண்டாகலானும், சி
வன் முதலியோர்மகிமைகளைக்கூறுதலையே பொருளாகக்கொ
ண்டபுராணங்களுக்குத் தாமதமுதலியகற்பங்களிற் பிரமனு
லோதப்படுதலைக் கூறிமுடிந்த அடுத்தவசனத்தானேமேற்கூ

றிய பயப்பாடு வலியுறுத்தப்படுதலானும், சாத்துவிகமுதலிய வாகவேற்படுத்ததற்குப் பயன் வேறோராற்றாற் பெறப்படாமையானும், பிறகூற்றோடு இயைபுபடாமையானுமென்க. இங்ஙனமே, எடுத்தோதிய மற்சபுராணவசனவாராய்ச்சியாற் சிவபுராணங்கள் தமோகுணத்தான் மறைக்கப்பட்ட சத்துவஞானத்தையுடைய பிரமனாலோதப்படுதல்பற்றிப்போற்றிக்கோடற்பாலனவல்லவாயினமையின், அவற்றின்வலியானுஞ் சிவனுக்குச் சகத்திற்குக் காரணமாந்தன்மைபெறப்படுமெனக்கருதல் கடைபோகுமாறில்லை. சாத்துவிகங்களான வைணவபுராணங்களில் "மாயிருஞாலம்விண்டுவயினுதித்தவன்றன்மடே, மேயிருந்திதியுற்றோங்குவிளம்புமத்திதியிறுதியே, பேயுமவ்விறுதிதன்னையிச்சகக்கவனே செய்யும், பாயருஞ்சமமன்றோற்குவேறெனப்புகலொணாதால்' என்றற்றொடக்கத்தனவாய் வருமவசனங்களானேநாராயணனேசகத்துக்குக்காரணனென்பது நாட்டப்படும்.

தருமசாத்திரங்களைச் செய்தவர்க்கெல்லாந் தலைவனான மநு, தருமநூற்றொடக்கத்தில், "இந்தச்சகம் இருளாயும் உணரப்படாததாயும் இலக்கணமில்லதாயும் அனுமானிக்கப்படாததாயுந் தெரிந்துணரப்படாததாயும் உறங்குவதாயுமிருந்தது" என்றெடுத்தோதி, "தத" வென்றெடுத்துக்கொண்டு, "சயம்புவும் விளங்காதவனு மாபூதங்களாய்வேறுபடும்வீரியத்தையுடையனுந் தமோனுதனுமான பகவன் அவ்விருளைக்கடந்துகொண்டு புறப்பட்டனன்; அவன்தன்சரீரத்தினின்றும் பலவேறுவகை யுயிர்களைத் தோற்றுவிக்கக்கருதி, அப்புவைச் சிருட்டித்து அதன்கண் வீரியத்தைவிடுத்தனன்; அதுஞாயிற்றினை யொக்குமொளியுடைய பொன்மயமான வோரண்டமாயது; அதன்பானின்றும் உலகங்களனைத்திற்குமுதுதாதையா

னை பிரமன்றனேயுதித்தனன்'' என்றுகூறி, ''அப்புத்தாரமெ ன்றிங்கறைந்திடப்படுமற்றந்த, வப்புத்தாகரன்பானின்றுந் தோன்றினவவைதாமாய்ந்து, செப்பிற்பேசிவற்குமுன்னைத் தானமாய்ச்சிறத்தலானே, செப்புற்றனிவன்றுனாராயணனெ னத்தெரித்துமன்னே'' என்னுஞ் சூலோகத்தானேபிதாமக னையுஞ்சிருட்டித்த சகத்திற்குக்காரணனான புருடன்மாட்டு 'நாராயண' நாமத்திற்குறுதிகூறுதலின், நாராயணனுக்கேசகத் திற்குக்காரணமாந்தன்மையுண்மையை வெளியிட்டனன்.

'சகத்தின்றோற்றமுதலியவற்றிற்குக்காரணமாகுகை பரப் பிரமப்பொருட்குஇலக்கண' மெனச் சூத்திரஞ்செய்த பிரம மீமாஞ்சையாக்கியோனும் பகவனுமானவாதராயணனும், பா பாரதத்துத் தான்கொண்டபரப்பிரமப்பொருளைப் புலப்படு த்தும்பொருட்டுப், ''பூதங்களனைத்தும் யுகத்தின்றொடக்கத் தற்றன்பானின்றுந்தோன்றித் தன்மாட்டொடுங்கநின்றவப் பிரபுவான நாராயணன் முதற்கண் நீரினைத்தோற்றுவித்தன ன பகவனான அவன் அதன்பின்பு அந்நீரினின்றும்பிரமனை த்தானேயுதிப்பித்தனன்'' என்றற்றொடக்கத்தனவாகப் பல விடங்களினு நாராயணனுக்கே சகத்திற்குக்காரணனுந்தன் மையுண்மையை நிலையுறுத்தினன். ஆகலின், இலக்கணத்தா னியைந்தநாராயணனே பரப்பிரமப்பொருளாம். இதுபற்றி யன்றே தைத்திரியச்சுருதி ''நாராயணபரப்பிரமம்'' என்றெ ழுந்ததூஉமென்க.

இனிப் பாசுபதர் 'நாராயணனினும் பரப்பிரமமேலானது ' என்றுரைத்தது பொருந்தாது; மகோபநிடதத்திற் சமானப்பி ரகரணத்து ''நாராயணன் பரப்பிரமம்'' என்று பதம்பிரித் துப் படிக்கக்காண்டலானும், ஈண்டும் அதனோடொற்றுமை ப்பொருள்போதருமாறுபின்னபதமான 'நாராயண' சத்தத்திற்

கு "வேற்றுமையுருபுகள் வெளிப்படுமொழித் தொகுமே" என்னும் வியாகரணசூத்திரம்பற்றிச் 'சு' த்தொக்கதென்று உய்த்துணரற்பாற்றாகலானும், தொகைச்சொல்லாயினும் நிடாதத்தபதிநியாயம்பற்றிச *சமானாதிகரணதத்புருடசமாசமென்றே கொள்ளற்பாற்றாகலானும், நிடாதத்தபதியதிகரணத்து †வியதிகரணதற்புருடனுக்குப்போலச் சமானாதிகரணதத்புருடனுக்கும் வேற்றுமைப்பொருளில் இலக்கணைகற்பிக்குமிகையில்லாச்சிறப்புண்மையானும், இலிங்கபுராணத்து "நாரணனே பரப்பிரமம் பரத்தத்துவத்தானே, நாரணனே பரஞ்சோதிவிதிபரமாத்மாவானே" என்று பிதாமகனைநோக்கிப் பகவன் ஓதினதுபற்றி நாராயணனுக்குப் பரப்பிரமத்தன்மையைக்கூறுதற்கண் இம்மேற்கோள் ...ற்கு உபபிருங்கணமிருத்தல்கொண்டு வியதிகரணதத்புருடக் கற்பனைசெல்லாமையானுமென்க." ஆகலின், நாராயணனே பரப்பிரமப்பொருளாமென்றும், அதுபற்றி அவனே கடவுளரெல்லாரினும் மேம்பட்டோனென்றுமாம். அற்றாகலினன்றே பகுவிருசப்பிராமணத்தில் "அங்கிகடவுளர்க்கவமன் விண்டுபரமன் அவரொழிந்த மற்றைத்தேவரெல்லாம் இடையாமோர்" என்றுகூறியதூஉமென்க.

இவ்வாற்றானே பிரமன் சிவன் இருவரும் பகவனாற் சிருட்டிக்கப்படுதலானும், அவனானியமிக்கப்படுதலானும், இந்திரன்முதலியோர்போற்பரதந்திரரேயாவர்; "அதனை பின்பு அத்தகுதியுடைய நாராயணன்மறித்து பதின்மூன்றிற்கருவுடையனாய்மனத்தாற்றியானமுற்றான்; தியானமுற்றவவனது நெற்றியிலிருந்துவேர்வைவீழ்ந்தது; அது இவ்வப்புக்களாம்; அவற்றின்கண் ஒளிபொருந்தியபொன்மயமான ஓரண்டமுண்

* சமானாதிகரணதத்புருடனென்னினும் பண்புத்தொகையென்னினும் ஒக்கும்.

† வியதிகரணதற்புருடனென்பது சொல்லானும்பொருளானும்வேறுபட்டு வருமொழிப்பொருளினை முடியும் இருமொழித்தொகை.

டாயிற்று; ஆண்டுச்சதுர்முகப்பிரமனுதித்தான்; அதன்பின்பு அந்நாராயணன் மற்றொருதிற் கருத்துடையனாய் மனத்தாற் றியானமுற்றான்; தியானமுற்றவவனது நெற்றியிலிருந்து மூன்றுகண்களுடைய சூலபாணியானவொருபுருடன் றோற்றினன்” என்று மகோபநிடதத்துள் “நாராயணன்பானின்றும் பிரமன்பிறக்கும் நாராயணன்பானின்றும் உருத்திரன் பிறக்கும்” என்று நாராயணோபநிடதத்தும் அவ்விருவருஞ் சிருட்டிக்கப்படுதல் கேட்கப்படுதலானும், மாபாரதத்துப் “பிரமன், ருத்ர, மனுத், தக்கன், பிருகு, தருமன், தபன், சமனென்றற்றொடக்கத்து இருபத்தொருவர் பிறந்தனர்; அவர்தாம் பிரசாபதிகளென்றுகருதப்படுவர்; அக்கடவுளின்புராண * மரியாதையைப் பூசிக்கின்றனர்” என்று அவ்விருவருக்குந் தக்கன்மனுமுதலியோர்க்குப்போலப்பகவனுலியற்றப்படுமொழியை டச்சைகைக்கொண்டொழுகுதல் கூறப்படுதலானுமென்க.

இனி அவ்விருவருள்ளும் பிரமனே யுயர்ந்தோனாம்; என்னை? எடுத்துக்காட்டிய சுருதிகளானே பிரமற்கு முற்றோற்றங்கேட்கப்படுதலானும், “இவ்விரு விபுதத்தலைவரும் என்னருள் வெகுளியிற்றோன்றி என்னாணைவழிநின்று தோற்றமொடுக்கமென்னுந் தொழில்களைச்செய்கின்றனர்; இப்பிரமன் சகத்தினைத் தோற்றுவித்துப் பிரபுவாய் உலககுருவாய் உறையும்; இவன் உமக்குத்தாயுந்தந்தையு முதாதையுமாம்; நெற்றியிலிருந்துதித்த மற்றையுருத்திரன் இவனுக்கனுசன்; என்னாணையால் உயிர்களனைத்திற்கும் வரத்தினைக்கொடுப்பவனாம்” என்று மாபாரதத்திற்றானே பிரமனுக்குச்சிவனனுசனால் கூறப்படுதலானும், விண்டுபுராணமுதலியவற்றில் இச்சிவன் அப்பிரமன்பாலுதித்தல் இயம்பப்படுதலானுமென்க.

* மரியாதையைப் பூசிக்கின்றனர் என்பதற்கு ஆணையைக் கைக்கொள்கின்றனரென்று பொருள்கொள்க.

ஆதலின், நாராயணனுக்குமுழுமுதன்மையோடமைந்திருக்கு மேலாந்தன்மையுமுண்மைபொருந்துதலானும், பிரமன்சிவன்முதலிய கடவுளர்க்குப் பரதந்திரத்தன்மை யுண்மையினானும், அவனே நிலைபெற்ற உறுதிப்பொருளைவிரும்புவோரால் உபாசிக்கற்பாலனுஞ் சரணடையற்பாலனுமாம்; "காரணன்றான்றியானிக்கற்பாலன்" என்னுமதர்வணிகச்சுருதியானும், "எவன் முதற்கட்பிரமனைச்சிருட்டித்தனன், எவன்அவற்கு வேதங்களைசசெவியறிவுறுத்தனன், ஆன்மாவினறிவைச் செலுத்துங்கடவுள் அவனும், அவனை வீட்டினைக்காதலிக்குநான் சரணடைகின்றனன்" என்னுஞ் சுவேதாச்சுவதரமந்திரத்தானுமென்க.

மூர்க்கதார்க்கிகரானோர்முதுக்குறைவிலாமையானே
பார்க்கணேபிதற்றியேற்றும்பயனிலாவுரைகணீக்கித்
தீர்க்கவாராய்ச்சியானேமறுப்புரைசெயற்காஞ்சாரம்
யார்க்குநன்றுவிளங்கச்சுருக்கியீண்டிசைத்தாமன்றே.

பூர்வபக்கமுற்றிற்று.

௨.

# சித்தாந்தம்.

---

எண்டுக்கூறலுறுவாம்.

வரமிக்கசகத்தினுக்குக்காரணமாகையன்ற
பிரமத்துக்கியலாமென்றல்வாய்மையமற்றதுபிடித்தே
திருமிக்கசம்புவானசிவபிரான்றன்னையாமவ்
வருமிக்கபிரமமன்றிங்களந்துமன்றுணிதுமன்றே.

அஃதாமாறு:—அதர்வசிரசில் "நாமொருவன்முதற்கணிரு
ந்தனன்" என்றெழுந்தசிவபிரான்வசனமுஞ் "சௌமிய சத்தே
முதற்கணிருந்தது" என்றற்றொடக்கத்துச்சுருதிகளாமேதைப்
படுஞ்சிருட்டியின்முற்பொழுதிற் சிவபிரான் முழுமுதன்மை
யோடு பொருந்தியிருத்தலைக் கூறுவதாம்; இஃது மற்றொரு
வனைக் குறித்ததன்றும் ; 'நீர் யாவர்' என்று தன்சிறப்பியலை
யறியலுறவேண்டி நிகழ்த்திய வினாவிற்கு இறையாயெழுந்த
சிவபிரான்வசன மற்றொருவன் விடயமாகும்வழி வினாவி
டைகள் தம்முண்மாறுபட்டு வழுவாமாகலின். "அவனந்தரத்
தினும்" எனவரும் அடுத்தவாக்கியத்தொடர்ச்சிக்கேற்ப வினா
வாக்கியத்திற்கு மற்றொருவன்விடயத்தன்மையைக் கற்பி
த்தல் அமைவுடைத்தாமென்றல் சங்கையன்று; விரோதிக்கு
முற்படு முபக்கிரமம் வலியுடைத்தாகலின் அதற்கேற்குமா
றே அடுத்தவாக்கியத்திற்கும்பொருள்கூறற்பாற்றாகலானும்,
'நீர்யாவர்' என்புழி, 'நீர்'என்னுஞ்சொல்லானே அவனுடைய

வந்தரியாமியையினவுங் கடவுளர், சொற்களனைத்தும் அந்தரியாமியின் முடிநிலைப் பொருட் குறிப்பித்தவாறு அறிந்தாராயின், பின்வாக்கியத்திலுள்ள 'நான்' என்னுஞ்சொல்லும் அவ்வந்தரியாமியின் முடிநிலைத் தேற்றெனவறிந்தாரேயாவராதல் பற்றியுண்மை அவர்க்குஅறிவுறுத்தற்பாலதின்மையின், கூறியபொருளை வலியுறுத்துதற்கண்ணே பரர்கூறுமாறு 'அவனந்தரத்தின்' என்றற்றொடக்கத்துவாக்கியங்களுக்குத் தந்நிலையில் அன்னுவயஞ்சம்பவிக்காமையின், அங்ஙனங் கற்பிக்கும் அவ்வியாபின்மை அவ்வண்ணமேநிலையுதலானுமென்பது.

'அவனந்தரத்தின்' என்றற்றொடக்கத்து வாக்கியங்களுக்குப் பரர்கூறியவாறு பொருள்கோடலும் பொருந்தாமின்று, "அதனுளெவரோ நீ அந்தரியாமிகத்தின்" என்றற்றொடக்கத்தனவற்றில் மற்றொன்றன்றொடு தொடர்பின்றிவரும் அவ்வென்னுஞ் சுட்டுச்சொற்குப் பிறசொல்லாலுணர்த்தப்படாத பலபொருள்களை அறிவிக்குந்தன்மையுண்டெனினும், எண்டுத்துணியப்பட்டவொருபொருளை யறிவுறுக்கும் அவ்வென்னுஞ்சுட்டுச்சொற்கு மற்றொன்றனாலுணர்த்தப்படாத பலபொருள்களையறிவுறுத்தல் கூடாமையின். முன்வாக்கியத்திலுள்ள 'நான்' என்னுஞ் சொற்கு அந்தரியாமியின்கண் முடிவுண்டாகலின், இந்த 'அ'வ்வென்னுஞ் சுட்டுச்சொற்குப் பிறிதொருசொல்லானுணர்த்தப்படும்பொருளை யறிவுறுக்குந்தன்மை உண்டென்றலும் பொருந்தாது; கடவுளரானே அம்முடிவு முன்னறியப்படாமைபற்றி அவர்க்கு அந்த 'அ'வ்வென்னுஞ் சுட்டு அப்பொருளைத்தருதல் செல்லாமையானும், சிவபிரானே யனைத்திற்கு மந்தரியாமியென்பது சிவதத்துவவிவேகத்தில் எம்மால் இனிது நாட்டப்பட்டமையின் அவனின்வேறாக அந்தரியாமி இல்லாமையானும், "விண்டுருன்மா" என்புழி 'ருன்மா'

என்னும்பதத்திற்கு "ஆதலினெனக்கான்மாவாமுருத்திரன் றன்னையானுக், காதலினர்ச்சிக்கின்றேன்முன்னர்யான்" என்று மோக்கதருமத்துக் கண்ணன்கூறியவசனத்தின்கண்ணுள்ள 'ஆன்மா' வென்னும்பதத்திற்கு முக்கியத்திறற்றான் உபசரிதத்திறற்றான் அபேதப்பொருள் போதரலானுமென்க. ஆதலின், "அவனந்தரத்தின்" என்றற் றொடக்கத்தனநின்றாங்குநின்றன்னுவயித்தல்செல்லாமையின், "வாய்மையைவாய்மையா" லென்றற்றொடக்கத்துச் சிவபிரான்வசனமனைத்தும் இறுதிக்கண்அன்னுவயமாம், அதன்பின்பு, "பின்னர்க்கடவுளர் உருத்திரனைப்பார்த்திலர்" என்றற்றொடக்கத்துச் சுருதிவாக்கியங் காணப்படுதலின் சிவபிரான்வசனமுடிந்ததென்னும் பொருளைப்பயக்கும்"என்று"என்னும்பதமுஞ் "சிவபிரான் மறைந்தனன்" என்னுஞ் சுருதிவசனமும் அவாவப்படுதலானும், 'அவனந்தரத்திலும்' என் றெழுந்த வாக்கியத்திற்குக் கடவுளர்க்குப் புலப்பட்ட தூலத்திருவுருவை ஒழித்து அதனினுஞ் சிறந்ததூஉம் அனைத்தினுள்ளும்புகுந்ததூஉம் அனைத்தினுங்கரந்ததூஉம் பரிபூரணமானதூஉமாகியசொரூபத்தைத் தலைக்கூடினனென்று அவனதுமறைதலைக் கூறுதற்கண் பொருட்காற்றலுண்மையானுமென்க. இவ்வாறுரைக்கிற் றூரான்னுவயக்குற்றம்ஒருசிறிதுமணுகுமாறின்று; அவாய்நிலை அண்மையினும் வலியுடைத்தாகலானும், "எதனுடனெதற்குப்பொருட்டொடர்புண்டா மியம்புமற்றஃதுசேய்த்தானவதனுடன்றொடருமானந்தரியந்தான் பொருடராதவாய்நிலையின்றேல்" என்றுமீமாஞ்சைவார்த்திகத்துட் கூறுதலானும், "கோப்புறினுஞ்சொற்பொருளியையின்றேல்—யாப்பின்றாகுமென்மனார்புலவர்" என்னும் விசுவசித்தநிகரணசூத்திரத்தானுமென்பது.

அற்றேல், ஒருவாக்கியத்துட்பட்டபதங்களுக்குத் தூரான்னுவயமுள்தாயினும் ஒருவன்வசனத்திடைப்பட்டதற்குஅவன் வசனத்தன்மையைவிலக்கிஅதற்குப்புறம்பே அன்னுவயஞ்செய்தல் பொருந்தாது, அங்ஙனம் வழக்கின்கண்வரக்கண்டதுமில்லையாலோவெனின்;—அற்றன்று,வழக்கின்கண் ஒருவன் கூற்றிற்கிடையே மற்றொருவன் கூற்றைவைத்தல் ஆலங்காரிகர்கூறும் * கற்பிதத்தன்மையென்னுங் குற்றமாய்ப் பொருந்தாதேனும், வேதவழக்கில் அதுகுற்றமாதலின்றாகலின். இதுமுன் இதுபின் இதுவாக்கியத்திற்படுமென்னு நியதி வேதத்திற்கின்று; "பொருட்பொருத்தத்திற்கேற்பச்சொற்கள்பொருந்து" மென்று உபதேசசகத்திரிகையிற்கூறுமாறுஉலகவாக்கியநெறி வேதவாக்கியநெறியைக் கடக்குமியல்பிற்றாகலானும், சந்தோகச்சுருதியில் "இவனைநான் பாடினன் அதனானே நீயெனக்கொருமதலையாயினை என்றுகௌசீதகி புத்திரற்குச்சொற்றான் கிரணங்களைநீவழிபடுக உனக்குப்பலதனயருதிப்பர்" என்றுசுருதியில்யாத்தஒருவன்வசனத்திடைப்பட்ட 'என்று கௌசீதகி புத்திரற்குச் 'சொற்றான்' என்பது அதன்புறத்தே சுருதிவாக்கியமாய் அன்னுவயமுற்றொழுகக்காண்டலானுமென்க. இனிஇவ்வாறன்றி, 'என்னின் வேறொருவனுமில்லை'யென்பதைவிளக்கும்பொருட்டு, அனைத்துயிரியல்பாகவேனும் அனைத்திற்குமுள்ளுயிராகவேனும் பொருள்விரித்துச், சிவபிரான் எப்பொருளினுள்ளும்புகுந்தனனெனக்கொண்டு, 'அவனந்தரத்தின்' என்றெழுந்தவாக்கியந் தன்னிலையிலன்னுவயம்பெறுமெனினுமாம். இங்ஙனம் பொருள்கொள்ளும்வழி,'நான்றலைக்கூடினன்' என்றெடுத்தோதாமை குற்றமாய்முடியாது, யாவனொருவனுக்கு யாண்டு உபசரிதமில்லாத 'நான்' என்னும்பதம்வழங்கக்காண்டும்,ஆண்டுஅவனை

* கற்பிதத்தன்மையாவது—தனனுட்பிறிதொன றனைபுடைத்தாகுகை.

'அவ'னென்னும் பதத்தாற் சுட்டுதல் வழக்கின்கணில்லாமையின், தன்னைப்போற் றன்னந்தரியாமிநிலையையுமப்பதத்தாற் சுட்டுதல் பொருந்தாமையின், இஃது பரமதத்தினுந்துல்லியமாகலினென்க.

இனித் தனதந்தரியாமியென்னுஞ் சிறப்புப்பொருளில் 'நான்' என்னும் பதத்தைப் பிரயோகிப்பினும், அந்தரியாமிப்பொதுமைபற்றி 'அவன்' என்னும்பதத்தாற்சுட்டுதல்சாலுமெனின்;——அங்ஙனந் தன்றன்மையைக்குறித்து 'நான் என்னும்பதத்தைப்பிரயோகிப்பினும் ஆன்மப்பொதுமைமுதலியவேற்றியல்புகுறித்துத் தன்னை'அவன்' என்னும்பதத்தாற் சுட்டுதல் சாலுமென்று துல்லியமாதல்காண்க. 'என்மாட்டுப் பதிந்தமனத்தினையுடையையாய்த்தான் எனக்கன்புடையையாய்த்தான்'' என்றெழுந்தவசனத்தில் 'என்' என்னுந்தன்மைச்சொல்லானுணர்த்தப்பட்ட வாசுதேவனுடைய ஆன்மாவின்கண், "அவனையேசரணடைக'' என்றற்றொடக்கத்தவன் கூற்றாகவெழுந்த வசனத்திடைப்பட்ட படர்க்கைவசனங்கட்குமுடிபினைப் பாருங் கீதையிலொப்பிக்கொண்டாரென்க. ஆகலின்,''அவனந்தரத்தினும்' 'என்றெழுந்தவசனத்திற்குயாங்கூறியபொருளே எவ்வாற்றானுமியைபுபட்டொழுகுதலின், "நானொருவன் முதற்கணிருந்தனன்'' என்றற்றொடக்கத்ததர்வசிரசுவாக்கியஞ் சிவபிரானுக்கு முழுமுதன்மையை யுரைக்குமென்பதுபொருந்துமென்க. இவ்வாறுஅதர்வசிரோபநிடதமுழுதுஞ் சிவபரமாகவே, ஆண்டுக்கூறிய "எங்கணும்விழிகளும் எங்கணுமுகங்களும் எங்கணுங்கைகளும் எங்கணுமடிகளுமுடையனாய் நாலுங்கரங்களாலனைத்தையுமடக்கி ஆகாயம் புடவியிரண்டையுந் தோற்றுவித்த கடவுளேகன்'' என்றற்றொடக்கத்துரைகளுஞ் சிவபிரான் சகத்திற்குக்காரணனாதலைக் கூறுமென்பது தானேபோதரும்.

"எப்பொழுதிருளிருந்தது" என்றெழுந்த சுவேதாச்சுவதர மந்திரமும் இருண்மாத்திரையானே வரைசெய்யப்பட்ட சிருட்டியின் முற்பொழுதிலிருத்தல்பற்றிச் சிவபிரானுக்கு முழுமுதன்மையை அவ்வாறெடுத்து மீக்கூறும். இனி 'எப்பொழுதிருளிருந்தது ' என்பதனுவாதமாகலின், புரோவாதத்திற்கியையுமாறு ஆண்டைச் 'சிவ' பதத்திற்கு நாராயணன்பொருளாமென்று பரராற் கற்பிக்கப்பட்டது. ஆண்டு அனுவாதமென்றதுண்மையேனும், சௌபாலவாக்கியமொன்றே அதன் புரோவாதமாமென்றதமையாது, 'இவ்விருளொன்றேயிருந்தது' "அப்பொழுது சத்தில்லை யசத்தில்லை" "இருளிருந்தது" "பிரசாபதி யொருவனே யிருந்தனன்பகலில்லையிரவில்லை அவனிவ்வடர்ந்த விருளில் உலாப்போதரா நின்றான்" என்றற்றொடக்கத்தனவாய் வழிமொழிந்துகொண்ட பொருளை யுணர்த்தும் பிறவாக்கியங்களுங் கேட்கப்படுதலின். "எப்பொழுது இருளிருந்தது" என்னுங்கூறுபோல "அப்பொழுது பகலில்லை" யென்றற்றொடக்கத்துக் கூறுமுழுதும் அனுவாதமன்று, 'அப்பொழுது' என்னும் பிரயோகத்தானே யாதானுமொன்று விதிக்கற்பாலதாகத் தோன்றுதலின். விதிக்கற்பாலது பகலிரவுகளின் விபாகாபாவமுமன்று, சதசத்தியல்பானபிரபஞ்சாபாவமுமன்று, எடுத்துக்காட்டியபுரோவாதவசனத் தொகுதியாற்றானே யவ்விரண்டும் பெறப்படுதலின். ஒன்றை யனுவதித்து மற்றொன்றை விதிக்க வெழுந்த வாக்கியம் அனுவாதத்திற்கு இன்றியமையாது வேண்டப்படும் புரோவாதத்தாற் பெறப்படாத பொருட்கண் முடிவு பெறுதவழிப்பயன்படாதாகலின், ஆண்டுப் 'பகலில்லை' என்றெழுந்ததூஉம் அனுவாதமாம். இங்ஙனமாகலின், 'சிவ' சத்தம் இயற்கையாயுள்ள பரமேசுவரப் பொருளைவிட்டுப்புரோவாதமொன்றானே பெறப்படு நாராயணன்கட்டானே முடி

வுபெறின், ஆண்டு 'எப்பொழுதிருள் அப்பொழுது' என்றெடுத்துக்கொண்டு ஒன்றனைவிதிப்பானெழுந்து பாதிவழிவந்தவாக்கியம், யாதினை விதித்து இளைப்பொழிந்ததென்க.

இனிச் 'சிவ'பதம் நாராயணனையுணர்த்துமாயிற் புரோவாதத்தாற் பெறப்படாத பொருளொன்றேனுங் கண்டிலமாகலின், பரமதத்தில் இவ்வாக்கியமுழுதும் வாளாகூற்றாயொழியும்; ஒழியவே, சிருட்டிக்கு முற்பொழுதை இருளைச்சுட்டிக்கூறும்வாக்கியங்களுள் அவ்விருளையதிட்டிப்பானை ஒரோவழி 'நாராயண' பதத்தாலும் ஒரோவழிப் 'பிரசாபதி' பதத்தாலும் ஒரோவழிப் 'பரமான்மா' முதலியபொதுச்சொற்களானுங் கூறுமென்று மாறுபட்ட சிறப்புப்பொருள்கள் கேட்கப்பட்டு ஒன்றன்கண்ணு முடிவு துணியப்படாமையின், விரோதவெழுச்சிக்கண் அவற்றிற்கு ஒற்றுமையை யுணர்த்தும்பொருட்டு, இம்மந்திரம் அவைதம்மானுணர்த்தப்படுஞ் சிருட்டிக்கு முற்பொழுதை யிருளை அனுவதித்துச் 'சிவ' பதத்தால் அதனை யதிட்டிப்போனுக்கு அவற்றாற் பெறப்படாத பரமேசுரத்தன்மையைவிதிக்குமென்று அதற்குப்பயப்பாடுகூறற்பாற்றாகலின், அதுபற்றி 'நாராயண'பதத்திற்கேசிவபிரானிடத்துப் பொருள்மதுகை கூறற்பாற்றென்றல் பொருத்தமாம். ஒருவாக்கியத்திற்குப் பயப்பாடின்மையைக் கூறுதலினும் ஒருபதத்திற்கு இலக்கணை கூறுதல் சிறப்புடைத்தாம்: "*அவதானஞ் செய்தற்குரிய பசுவினவயவங்கள் பதினொன்றும் அவற்றை யிருமுறை யவதானஞ்செய்க" வென்று பசுவேள்விக்கட்போந்த சோதகத்தாற்பெறப்படு மவதானவிரட்டையை மறித்தும் விதிக்கவெழுந்த வாக்கியத்தின்பயப்பாட்டின் இன்மையை யொழித்தற்பொருட்டு "நான்கவதானத்திற்

* அவதானமாவது—ஓமத்திரவியத்தை ஓமித்தற்குரிய கருவியின்கணெடுத்துவைத்தல்.

சூரியஎசமானன்றுனும் வபையை ஐந்துமுறையவதானஞ்செய்க" வென்னும் வாக்கியத்தின்கண் 'வபை' யென்னும் பதத்திற்குப் பொதுவகையானே பசுவின் சம்பந்தமுடைய இருதயமுதலிய அவயவங்களனைத்தினும் இலக்கணை போதரும். அங்ஙனம்போதருமாயினும், இருதயமுதலிய அவயவங்களினும்ஐந்தவதானம்போதரும்பொருட்டு * உபத்தரண 0அபிகாரக்கிரியைகள் நிகழ்வுழி இருதயமுதலிய அவிசுகளில் மூன்றவதான நேர்ந்துழி, அவிசை இருமுறையே அவதானஞ்செக உபத்தரண அபிகாரங்களுள் ஒன்றின் இரட்டிபபினால் எண்ணிறைவு பெறுகவென்னு நியமத்தானே அவ்வாக்கியம் பயப்பாடுடைத்தாம்" என்றிவ்வாறுபூருவதந்திரத்தினும்போந்தமைகாண்க.

இங்ஙனங்கூறியவாற்றால் 'எப்பொழுது இருளிருந்தது' என்னுமந்திரத்தின் முற்பாதி இருளொன்றேயிருந்தது என்றற்றொடக்கத்தொருசில காரணவாக்கியங்களுக்குச் சிவபிரானிடத்து முடிவுகூறும். அப்பாற்பிற்பாதியுட்பட்ட 'அது அக்கர' மென்னுங்கூறு "சௌமியனே ஓங்கியெரியுமங்கியின்கண் ஒத்தவுருவுடைய பொறிகள் ஆயிரமாயிரமாக உதித்தல்போல அக்கரத்தினின்றும் பல்வேறுவகைப்படும்பொருள்களுதித்து அதன்கண்ணே யொடுங்கும்" என்றற்றொடக்கத்து முண்டகமுதலிய சுருதிகளுக்கும், 'அது சூரியனினுஞ்சிறந்தது' என்னுங்கூறு சூரியமண்டலத்திலுறையும்பரமபுருடன்கண் சகத்திற்குக் காரணமாந்தன்மையிற் பிரியாத அனைத்திற்கு மந்திரியாமியாமிலிங்கத்தை 'எம்மறிவைஎவன் பிரேரிக்கும்' என்றுகூறுங் காயத்திரிமந்திரத்திற்கும், 'அதன்பானின்றுமுன்னரறிவுமங்குரித்தது' என்னுங்கூறு "நான்

* உபத்தரணமாவது—அவிசையிடுதற்குரிய பாத்திரத்தை நெய்யாற்சுத்திசெய்தல்.

0 அபிகாரமாவது—பாத்திரத்திலிட்ட அவிசின்கண் நெய்யை உகுத்தல்.

அநேகமாவல் தோற்றுவலென்று அதுபார்த்தது'' "உலகங்களைச் சிருட்டிப்பலென்று அவன் பார்த்தனன்'' "அவன் அநேகமாவன்தோற்றுவன் என்றுகாமுற்றான்'' பிரமந் தவத்தாற்பெரிதாம் அதன்பானின்று மன்னந்தோன்றும்'' என்று முதற்சிருட்டிக்குமுற் சிருட்டித்தற்குரியபொருட்டொகுதியைக்குறித்த சிருட்டிகர்த்தாவின் சங்கற்பத்தைப் 'பார்த்தன்' முதலிய பதங்களாற்கூறுஞ் சாந்தோக்கியமுதலிய சுருதிகளினுட்பட்ட காரணவாக்கியங்களுக்குஞ், சிவபிரான் கண்முடிவுகூறுமென்பதுகொண்டு, இம்மந்திரங்காரணவாக்கியகளனைத்திற்குஞ் சிவவிடயத்தன்மையை நாட்டிச், சிவபிரானுக்கு முழுமுதன்மையைச் சாலவும்விளக்குமென்க.

இனிப்புருடசூத்தமந்திரப்பிரத்தியபிஞ்ஞையைபற்றிச் சுவேதாச்சுவதரோபநிடத நாராயணபரமாமென்று கூறியதுபொருந்தாது, "உருத்திரரே! யாதுமக்கு மங்களதனுவாம் கிரியிற்றங்கி உயிர்க்குச் சுகத்தைச் செய்பவரோ! நீர் எந்த வேவினைக்கைக்கொள்கின்றீர் என் புத்திரனையும் அவன் புத்திரனையும் வருத்தற்க எம்மாயுளைக்குறைக்காதொழிக'' என்றற்றொடக்கத்துத்திருவுருத்திரத்திற்படிக்கப்படு மநேகமந்திரப்பிரத்தியபிஞ்ஞையும் இம்மந்திரத்திருத்தலின்' ஆண்டுச் சிறப்பாக ஒருபாற்கோடுதற்கு மூலமின்மையினென்க.

"வேறுவழியில்லை'' யென்னும்புருடசூத்தமந்திரஞாபகம் அனன்னியதாசித்தமென்றுகூறுதலும் பொருந்தாது ;கைவல்லியோபநிடதத்து "உமைக்குக்கொழுநனும் பரமேசுரனும் பிரபுவு முக்கண்ணனும் பொறையாளனுமானநீலகண்டனை'' என்று கிளந்தெடுத்தோதி "அவனை அறிந்து மிருத்தியுவைக் கடப்பான் வீட்டிற்குவேறு நெறியில்லை'', யெனவருதல் கேட்கப்படுதலின், வீட்டினைக்கூடுமுபாயத்துணிபு புருடசூ

த்தத்திற்கூறப்படு நாராயணன்பானிலேயுதல்பெறப்படாமை யினென்க.

இனி உண்மையாளுேக்கும்வழிப் புருடசூத்தந்தானு நாராயணபரமன்ரும், "அமிர்தத்திற் கீசானனன்ரே" வென்புழி 'ஈசானன்' எனவருமபிதானச்சுருதிபற்றி அதுசிவபரமாகவின். ஐசுவரியயோகம்பற்றி 'யீசான'பதம் பொதுவாம் பிறவெனின்;— அறியாதுகூறினுய்; அது யோகம்பற்றிப் பொதுவாதல் உண்மையாயினும்,யோகரூடிபற்றி ஈசுவரனுக்குச்சிறப்பாம்; "ஈசுவரன் சர்வன் ஈசானன் சங்கரன் சந்திரசேகரன்" எனவும் "ஈசானன் பசுபதி சசிசேகரன்சூலி சிவன்சங்கரன்" எனவும் வருமபிதானகோசமிருதிபரம்பரை பற்றிச் சிறப்புவகையானேஅதற்கு ஆண்டுயோகரூடிபோதராலானும், தனித்தயோகத்தினுஞ் சத்தியிரண்டனனுகூலப்பேறுடைய யோகரூடிவலியுடைத்தாகலானும், பிரமமீமாஞ்சையில் "சத்தத்தானேயளந்தறிபொருளாம்" என்னுமதிகரணத்து "அங்குட்டமாத்திரனுனபுருடன் புகையில்லாத வனலைப்போலும் இறப்பினு மெதிர்வினு முள்ளதற் கீசானன் அவனே இன்றுமுளன் நாளையுமுளனும்" எனவருங்கடவல்லிமந்திரத்திற்கு "அங்குட்டமாத்திரன்" என்றபரிமாணலிங்கத்தானேசிவபரமாதல்போந்தவழி 'ஈசானன்' என்னுமபிதானச்சுருதிவடிவானபதத்திறற்பரமான்மபரமென்று துணியப்படுதல் பற்றி அதற்குச்சிறப்புண்மை வெளிப்படுதலானுமென்க. இனி அதற்குக் கேவலயௌகிகத்தன்மையுளதாயின் பரமான்மாவைக்குறிக்குஞ்சிறப்புச்சொல்லில்லாமையின், "இறப்பெதிர்வினுள்ளதற்கு ஈசுரனுதலையுணர்த்து மிலிங்கத்தாற்றுணியற்பாற்றெனப்பட்டுச் 'சத்தத்தானேயளந்தறிபொருளா'மென்னுஞ்சூத்திரம்பொருந்தாதாய்முடியுமென்க. பரருக்கும்,"அங்

குட்ட அளவையானறியப்படுபவன் பரமான்மா இறப்பினு மெதிர்விலுமுள்ளதற் கீசானன்", என்று பரமான்மாவை யுணர்த்துஞ் சொல்லுண்மையின், 'சத்த' பதத்தானேயீசா னசத்தமே குறிக்கொள்ளப்படுதலின், 'ஈசுரசம்பந்தமானஇலி ங்கத்தாற்றுணிதல்கருத்தன்றும்; மற்றியாதுகருத்தெனின்;— ஈசுரனையுணர்த்துஞ் சத்தத்தானேயென்பது ஏகாரத்திற்குக் கருத்தாம்" என்றற்றொடக்கத்துத் தம்பாடியகாரர்முதலி யோர் வசனமாறுபடுமென்க. இதனானே, "முத்திக்கு ஈசா னன்" என்றுபுருடசூத்தத்தில் முத்தியாகிய ஐசுவரியங்கூறப் படுதலின், அவயவவாற்றலொன்றேகொண்டுபிரயோகிக்கப்ப ட்ட 'ஈசான' பதம் எவர்க்குமருடியாகுமாறில்லை யென்னுமாச ங்கையொழிக்கப்பட்டது. "இறப்பெதிர்வுகளினுள்ளதற்கீசா னன்" எனப்பிரதியோகிவழியும், ஈசானபதத்திற்குச் சமு தாயசத்திபற்றி அபிதானச்சுருதித்தன்மை யொப்பப்படுதலா னும், அவயவசத்திப் பொருட்டொடர்புடைய தொன்றற்கு மற்றொருபதத்தாற் சுட்டுதலில்லாதவழியே சமுதாயசத்திவெ ளிப்படுமென்பதற் கோத்தில்லாமையானுமென்க.

அற்றேல், "ஈசானன் பிராணனைக்கொடுப்போன் பிரா ணன்" எனவிண்டுவினாயிரநாமத்திடையே வைத்தெண்ணிய தே'ஈசான' சத்தத்திற்குவிண்டுபொருளாதல்பெறப்படும், வே தத்தின் உபபிருங்கணப்பொருட்டா யெழுந்த மாபாரதத்தில் அவ்வாறேபடிக்கப்படுதலின் வேதப்பொருளைத் துணியும்வ ழி அபிதானகோசங்களினும் அது முக்கியமா மென்றுகொண் டு ஈசானபதத்திற்கு விண்டுபரத்துவங்கூறலேபொருத்தமா ம், அற்றாகலினன்றே அங்குட்டவாக்கியதிற்குத்தாமேற்கொ ண்டபரமான்மபரத்துவந் தம்மானும் ஈசானச்சுருதிபற்றியு ரைக்கப்படும்பிறவெனின்;—அற்றன்று, "ஆயிரநாமங்களாற்

றுதித்து" என்னுமுபக்கிரமத்திற் கேற்ப வனைத்தையுந்தானெ னக்கருதித் துதித்த "விசுவம்விண்டு" வென்றற்றொடக்கத் தாயிரநாமத்துள் எல்லாந்தானுந்தன்மைகுறித்து வனைக்கட வுளர்க்குரிய நாமங்கள்பலவற்றையுந் தலைப்பெய்தோதக்கா ண்டலின், அதுபற்றி அவற்றிற்காற்றல்செல்லாமையினென் க. அல்லதூஉம், மாபாரதம் இலிங்கம் ஆதித்தபுராணமுதலி பவற்றி லெடுத்தோதப்பட்ட சிவபிரானுக்குரியவாயிரநாமங்க ளுளடங்காதவிண்டுநாமமில்லாமையின், அரிவம்மிசத்திற்கை லாயயாத்திரையில் "உன்பெயர்தாமுமுலகினிற்சிறப்புற்றோ ங்கிடும்பிறபெயர்தாமு, மென்பெயராகும்விசாரமற்றிதன்க ணில்லைகோவிந்த" என்று கண்ணனைநோக்கிச் சிவபிரானரு ளிச்செய்தவசனத்தானே விண்டுநாமங்களுக்கும் உலகத்தில் வழங்கு மேனைச்சிறந்தநாமங்களுக்குஞ் சிவநாமத்தன்மைபெ றப்படுதலின், அபிதானச்சுருதிபற்றி விண்டுபரத்துவந்துணி தல் ஒருசிறிதுமேலாதென்க. ஆகலின், துதிப்பொருட்டாவ தோர் மணமுமில்லாததூஉம் உலகத்திற்கும் வேதத்திற்கும் பொதுவான நாமங்களைத்தொகுத்துரைத்தலைத்தொழிலாகக் கொண்டதூமாகிய அபிதானகோசமிருதியேபெயர்த்தன்மை க்கட்பிரபலமுடையதெனப்பட்டு, 'ஈசான'பதத்திற்குச்சிவபி ரான்பொருளென்பது நாட்டப்படுதலின், அதுபற்றிப் புரு டசூத்தஞ் சிவபரமென்று துணிதல் பொருத்தமாம்.

அற்றேலஃதங்ஙனமாக, புருடச்சுருதிமுதலியஅநேகபிரமா ணங்கள்பற்றிஅதற்கு நாராயணபரத்துவங்கூறத்தகுமாலோ வெனின்;—புருடசத்தநாராயணவாசகமாகுமாறில்லை;" ஆன் மாவுமானவனும்புருடர்" என்னுமபிதானகோசமிருதியானும், உலகவழக்கினும்வேதவழக்கினும்பயின்றுவருதலானும், அதற் குஆன்மப்பொதுமையிற்சத்தியுண்மை இன்றியமையாமையி

ன், அதுபற்றியே "புருடனன்றோ நாராயணன்" என்றற்றொடக்கத்து நாராயணனை விடயமாகவுடைய பிரயோகங்களியைபுபட்டொழுகுதலின்,'பார்கிராச்சிய' முதலியசத்தங்களுக்கு ஒருசிறிதுவழக்குண்டேனும், திருணகிருதமுதலியவற்றிற்சாதிமாத்திரையிற் சத்திபெறப்படுதலின், அதுகொண்டே சுத்திசெய்யப்பட்ட திருணகிருதமுதலியவற்றின்கண்ணதான ஆன்றோர்வழக்கும் பொருந்துதலின், சுத்திசெய்யப்பட்டுச்சிறந்தனவற்றிற்குச் சிறப்பாகவேறாற்றல் கற்பித்தல்வேண்டாவென்னும் பாகிராச்சிய வதிகரணநியாயம்பற்றி அச்சொற்கு நாராயணன்கட் சிறப்பாகப் பிறிதோராற்றல்கற்பிக்கவேண்டாமையினென்க.

அற்றேலஃதங்ஙனமாகுக, புருடசத்ததிற்குநாராயணநாமமாகுதற்கண்ணதாகுந்துணிபுரைநியாயப்பற்றுக்கோடின்றியும் ஆண்டுச்சிறப்பாற்றலைக்கற்பிக்கவெனின்;—அற்றன்று,சாமானியசத்தியுடையபுருடசத்தமும் ஒருபுடையியைபுபற்றிநாராயணன்கண்முடிவுடைத்தாமென்னு மிந்தஞாபகத்தாற்பயன்படும்பொருளையுடைய அருத்தவாதங்கள்பலவற்றைக்கொண்ட புராணத்துணிபுரை,அபிதானகோசமிருதிபோலஅந்நியதாசித்தப்பிரயோகவிடயத்தில்ஆற்றலைத்தாராதாகலின், சித்திராதிகரணத்திற் 'றுதியொன்றன்பெயராகவழங்கும்'பிரட்ட'பதத்திற்கு "ஓரோவழிப்பிரட்டங்களாற் றுதிக்கின்றான்" என்பது முதலியவற்றிற் றுதிக்குச்சாதனமாய ரதந்தரமுதலியவற்றில் இலக்கணைபற்றி வழங்கற்பாடுண்டென்பதை யறிவுறுத்தலாற்பயப்பாடுடைத்தாகிய" அப்புக்களிருதுவாயின அவற்றின்பிரட்டத்தில்வாயுப்புகுந்தான்" என்றுதொடக்கத்தின்ரதந்தரமுதலியவற்றினும்'பிரட்ட'பதம்வழங்குநிமித்தத்தைக்கூறும்அருத்தவாதத்துணிபுரைக்கு ஆண்டுச் சிறப்பாகவேறாற்றல் கற்பி

த்தல்வேண்டா'மென்று மீமாஞ்சகரா லொப்பப்படுதலினெ ன்க. புட்டசத்தத்திற்கு நாராயணன் சிறந்தபொருளாமெ ன்ற வசனம்பற்றி அவனே யதற்குப்பொருளாவனென்னும் வாயாட்டும் பொருந்தாது; யாண்டும்பயின்றுவரும் வழக்கு டைய அபிதானகோசமிருதியாற் பெறப்பட்டசாமானியசத்தி க்கு மாறாக அவன்கட்சிறப்பாற்றலை நிகழ்த்தும்வசனம்" கோ அசுவங்களின் வேறாயின பசுக்களல்ல கோஅசுவங்கள் பசுக் களாம் " என்னுஞ்சுருதியினுந் தந்திரவார்த்திகத்தினும் யாங் கூறியவாறே 'பசுத்தன்மைச்சாதி கோஅசுவங்களுக்குச் சி றப்' பென்றுகூறும் வசனம் உபகாரமிகுதிப்பாடுபெற்றிப்புக ழ்ச்சிப்பொருட்டாதல்போலச்சுவாதந்திரியமுதலியபுருடவில க்கணமிகுதிப்பாடுபெற்றி நாராயணன்கட் புகழ்ச்சிப்பொருட் டாமென்றே தாற்பரியங்கூறல்-நியாயமாகலானும், "பிரகிரு திப்பற்றில்லாமையானுஞ் சுவாதந்திரியத்தானு மகிமையானும் அப்பெற்றியனான விந்தவாசுதேவனே அறிவுடையோராற்பு ருடனென்றுரைக்கப்படும் பிரமன்முதலிய சகமெல்லா மக னேடவோடொக்கும் அந்நீர்மையுடைய விந்தவாசுதேவனே ரோபுருடனென்றுரைக்கப்படும்" என்னு நாரசிங்கபுராணவச னத்தானே அவ்வாறு கருதப்படுதலானுமென்க.

'மகாபுருட'சித்தந்தானுநாராயணபரமன்று, மேலுரைத்த வாறு சாமானியசத்திகொண்டே பிரயோகம்வழிப்படுதலின். ஈண்டுமகாபுருடக் கேள்வியுமின்று, 'புருடன்மகான் 'எனப்பி ன்னபதங்களாக வைத்துப்படிக்கப்படுதலின், இரண்டுபெதங் களுக் கொருசமுதாயசத்தி யொரோவிடத்துமில்லாமையின். "இலக்குமிக்குப்பதியாந்தன்மையென்னுமிலிங்கமும் ஈசான ச்சுருதிக்கேற்ற 'கிறி' சத்தவடிவான கிறில்லேகைக்குப் பொ ருளாங்கௌரிக்குப் பதியாந்தன்மைத்தா மிலிங்கானுகுணத்

தன்மையினையே பற்றும். வாசசநேயத்திற் "சியுமிலக்குமி யு முண்பத்தினிமார்" எனப்படிக்கப்படுமாலே யெனின்;— அதுகொண்டவர்கருத்து நிரம்புமாறில்லை, 'சி' யென்னுஞ் சத்தஞ் சமானப்பிரகரணத்திலோதிய 'கிறில்லேகை' யின் பொருளிற்றானே முடிதலின். இஃததன்கண்முடியுமெனமா றிற்படுமிழுக் கென்னையென்பதாசங்கையன்று, 'கிறீ' சத்தங் தமலையிடத்தில் வழங்கக்காணாமையாலும், 'சி' சத்தஞ் 'சியை இலக்குமியை ஒளபலையை அம்பிகையைக் கோவைச் சட்டி யைச் சயையை இந்திரசேனையென்றுசொற்றார்' என்று ஆ யுசியகுத்தத்திற்கௌரிபால்வழங்கக்காண்டலாலும், 'கிறீயும்' என்றுவருமந்திரத்திற்குக் கிரகவெச்சத்திற்சோமற்கதிதெய்வ மான கௌரிபூசையில் விநியோகம் மிருதியர்ணவமுதலியவ ற்றிற் கூறப்படுதல் கொண்டு 'கிறீ' சத்தத்திற்குக் கௌரிபரத் துவம் இன்றியமையாமையாலுமென்க. ஆகலான், முதற்சுரு திக் கேற்றவாற்றானே "அவனதங்கமண்டலத்திலிருக்கு மகே சுவரியாகிய பராசத்தி சாமளை யாவர்மனத்தையும் வசஞ்செய் பவள் மாலக்குமியென்றெடுத்துத் துதிக்கப்படுவள்" என்று சிவபுராணத்திற்கூறப்படுஞ் சிவபிரான தங்கமண்டலத்திலு றையும் அம்பிகையின் வடிவுகளு ளொன்றன் கூறாகிய வில க்குமிக்குப்பதியாந்தன்மையென்னுமிலிங்கம் மீசுரபரமேயாம். அற்றாகலினன்றே மறித்தும் "பகலு மிரவும் பக்கங்களாம்" என்று பெருவழக்கான அர்த்தநாரீசுரவடிவஞ் சிவபிரானுக் கே யருளிச்செய்யப்பட்டதூஉமென்க.

இனிப் புருடசூத்தத்திற்கு 'நாராயணம்' என்னும் பெயரு ம்அவனிருடியாதல்பற்றியல்லது பொருளாதல்பற்றிப்போந்த தன்று, "நாராயணனாற்காணப்பட்ட புருடசூத்தத்தா லபிய ந்திரிக்கப்படுஞ் சிதையைவழிபட்டு இப்பிறப்பிற்புருடனாகும்'

எனவாதூலசூத்திரத்தில் இருடி தெய்வமிரண்டு நாராயண புருடசூத்தங்களிரண்டானும் வேறாகக்கூறப்படுதலினென்க. நாராயணரார்தனத்தில் விநியோகித்தரூஉம் அபிதானச்சுருதியாற்போந்த விதனதுசிவபரத்துவத்தைக் கெடுக்கவற்றன்று, அபிதானச்சுருதிவலியானே அங்கிமுதலிய கடவுளரையே பொருளாகவுடைய "அங்கி சுவர்க்கத்திற்குத்தலைவன்" என்றற்றொடக்கத்து மந்திரங்களுக்குக் கிரகவெச்சத்தில் அவ்வக்கிரகவாராதனையில் அவ்வக்கடவுளர்க்குரிய மந்திரங்களை விநியோகிக்கும்வழி அங்காரகன் முதலியோர் பூசையில் விநியோகித்தலும் அக்கடவுளரைப் பலவாறாகப் பிரீதிப்படுத்துஞ் செபமுதலியவற்றில்விநியோகித்தலும் ஒப்பப்படுதலினென்க. இங்ஙனங்கொள்ளாக்கால், "விசுவரூபனாகிய தனதனைப்புருடசூத்தத்தால்வேட்க அதன்பின்பு நாராயணங்களிரண்டானும் வழிபடுக" என்றற்றொடக்கத்தேனைவிநியோகம்பற்றி மற்றொருகடவுள்பரமாதலுஞ்செல்லுமென்க.

இச்சூத்தத்திற்கு அபிதானச்சுருதிமுதலியவற்றிற்கேற்றவிநியோகமுமுண்டு: அதுபோதாயனசூத்திரத்திற் றிருவுருத்திரவங்கநியாசங்களிற் சிவசங்கற்பமுதலியவற்றோடு விநியோகித்தலும் இலிங்கபுராணத்திற் சிவபூசாவிதியிற் "சேட்டசாமாக்கண்மூன்றானும் தேவவிரதங்களானும் புண்ணியமான ரதந்திரத்தானும் புருடசூத்தத்தானும்" என்றெடுத்துச் சிவபிரானபிடேகத்திற் றேவவிரதமுதலியவற்றோடு விநியோகித்தலுமாம்.

விண்டுபுராணமுதலியவற்றிற் காணப்பட்ட உபபிருங்கணமும் விநியோகிக்கப்பட்ட மந்திரப்பொருளை விரித்துரைப்பதொன்றாகலின், கேட்கப்பட்டவிநியோகத்தைப் பாதுகாத்தற்பொருட்டாய் அன்னியதாசித்தமாய்ச் சுருதியாற் போ

ந்த சிவபரத்துவத்தை நீக்கவற்றன்று. அங்ஙனமன்றே, ஒருகடவுட்குரியமந்திரங்கட்கு விதிவலியானே மற்றொருகடவுளின் வேள்விக்கண்ணும் விநியோகமுண்டு. அந்தானும் அம்மந்திரங்களுக்கு வேட்கப்படுங்கடவுளை விளக்கற்பயத்தவாமாற்றாற்பாதுகாக்கப்படும். மந்திராதிகரணத்தில் "மந்திரவிநியோகத்திற்குவாக்கியப்பொருட்கூற்று வாயிலாயிருத்தலின் மற்றொருகடவுளைச் சுட்டுமெந்திரத்திற்கு "எடுத்தோத்தாற்பிறபொருளுடைத்தைந்திரி " என்னும் ஐந்திரியதிகரண நியாயத்தானே இலக்கணைமுதலிய விருத்திகூறற்பாற்று. அதனோடுகூடியவிசேடணபதங்களுக்கோவெனின்; —"ப்ச்சைத்தருப்பைகளாற் பரப்புக " வென்னுமந்திரத்திற் றருப்பையிற் 'பச்சை' யென்னும்பதம்இயையுமாறுபோல . வதன்கட்பொருந்தும் பொருளையுடைய விசேடணபதங்களுக்கு அதனையுடையான குணமுதலியவற்றைப் புலப்படுத்துமுகத்தானே ஆண்டு முடிவுகூறற்பாற்று. "சோமஞ்சுத்தியாகின்றது மதிகட்குத்தந்தை " என்னுமந்திரத்திற் சோமக்கொடியின்கண் அக்கினிமுதலியவற்றிற்குத் தாதைத்தன்மை கூறுமாறுபோல ஆண்டுப்பொருந்தாப் பொருளையுணர்த்தும் பதங்களுக்குப் புண்ணியத்தின்பொருட்டு இல்குணமுதலியவற்றை வெளிப்படுத்துமுகத்தான் ஆண்டுமுடிபுகூறத்தகும். பொருந்தாவிசேடணத்தையும் பொருந்தும்விசேடணம்போற் பொருளுணாத்தல், மந்திரத்திற்கேட்கப்படும் விசேடணத்தோடியைந்த பொருளைப் புலப்படுத்தல், புண்ணியத்தைப் பயக்குமென்னு நியமத்தானே அதிட்டத்தின்பொருட்டாம்." என்னுமிப்பொருள், "எடுத்தோத்தானேயலுவமற்றொன்றன்-பொருட்டுப்பிரயோகமுடைத்தாமென்ப " என ஒன்பதாமதிகரணத்திருத்தலின்.

இங்ஙனங்கூறியவாற்றால், அபிதானச்சுருதி அதற்கேற்றவி லிங்கமுதலியவற்றானே நியமிக்கப்பட்ட சிவபிரானையே செம்பொருளாகக்கொண்ட புருடசூத்தம்,கேட்கப்பட்ட வேலை விநியோகத்தைப் பாதுகாக்கும்பொருட்டுநாராயணனைவிளக்குமாறுதானும் தனதன்முதலியாரை விளக்குமாறுபோல ஒரோவழிப்புருடபுத்தியாற்கற்பிக்கத்தக்கதென்னுமத்தலையே, அவனதாராதனையையும் அதனங்கத்தையும் அதன்பயன்முதலியவற்றையுங் கிளந்தெடுத்துவிரிக்கும் புராணகமவசனங்களி னியமிக்கப்பட்டதென்று, உபபிருங்கணங்கள் அன்னியதாசித்தமாயினமைகாண்க. பிறண்டும்பொருந்தாப்பொருளை விசேடணமாகக்கொண்ட மந்திரங்களுக்குப் புராணங்களில்அங்ஙனம்உபபிருங்கணம்வரக்காண்டும். அது வாய்வ்விய சங்கிதையில் சோமத்தைவேள்வியின் பொருட்டுச் சிருட்டித்தனர் சோமத்தினின்றுஞ் சுவர்க்கமும் புடவியும் அங்கியுஞ் சூரியனுஞ் சிமானும்விண்டுவுமானநாராயணனும் உதித்தனர் சகமனைத்துஞ் சோமமயமாம்'' எனவ்வுருவனவும் பிறவுமாம்.

புருடசூத்தஞ் சிவபரமாதலை யெடுத்துரைக்கும் வேறுபபிருங்கணங்களுமுண்டு. அது இலிங்கபுராணத்தில் "வியாபியான அவனுக்குமேலுலகந்தலை அப்பரமேட்டிக்கு ஆகாயம் நாபி அப்பெரியானுக்குச் சோமசூரியாக்கினிகள் விழிகள் திக்குக்கள் செவிகள் மகான்மாவர்ன அவன் முகாம்புயத்தினின்றும் வியாபியும் பகவனுமானபிரமனும் பிராமணரும் பிறந்தனர் புயங்களினின்றும் இந்திரனும் விண்டுவுஞ் சத்திரியரும் பிறந்தனர் அப்பிஞ்கியின்றொடைகளினின்றும் வைசியர்பிறந்தனர் பாதத்தினின்றுஞ்சூத்திரர்பிறந்தனர்" என்றற்றொடக்கத்தனவாம்.இங்ஙனமெடுத்துக்காட்டற்பாலனபிறவுமுள.இங்ஙனமாகலின்,மேற்கூறியவாறு அன்னியதாசித்தமாய் யாறுபட்டுவரும் விநியோகத்தானும், உபபிருங்கணத்தானும்

தொலையாவலியுடைய வபிதானச்சுருதியானும், அதற்கேற்ற இலிங்கத்தானும், விநியோகத்தானும், உபபிருங்கணங்களானும், புருடசூத்தஞ் சிவபரமாதல்பெறப்படுதலின், அதன்கண்ணதான பிரத்தியபிஞ்ஞைபற்றிச் சுவேதாச்சுவதரமந்திரங்களுக்கு நாராயணபரத்துவசங்கைவருதல் யாண்டையதென்க. "அரன் சிவன் உருத்திரன் மகேசுரன்" முதலியவனேக சுருதிகளாற் பெறப்பட்ட விதனது சிவபரத்துவத்தை விரோதப்பிரத்தியபிஞ்ஞையுள்வழியுங் கெடுக்கவற்றன்று, இரண்டுதலங்களுடைய வாராய்ச்சியை அவாவிப் பிற்பொழுதிற்றோன்றுதல்பற்றிப் பாடக்கிரமத்தினு முக்கியக்கிரமந் துர்ப்பலமுடைத்தாதல்போல, அபிதானச்சுருதியினும் பிரத்தியபிஞ்ஞை துர்ப்பலமுடைத்தாகலின். "அரன் சிவன் உருத்திரன் மகேசுரன்" முதலியசத்தங்கள் சிறப்பாற்றாற் சிவபிரானுக்கு அபிதானச்சுருதியாதல் ஈசானசத்தம்போல் வைத்துணரற்பாற்று.

இவ்வாறு இவ்வுபநிடதமுழுதுஞ் சிவபரமாயிருத்தலின், "பெரியோனான வீசன்மறித்தும் அவ்வாறு பதிகளைச்சிருட்டித்து முழுநாயகத்தன்மையைப் புரியும் அவன் காரணன் காரணாதிபர்க்கு மதிபன் இவனுக்கொரு தாதையுந் தலைவனுமில்லை சந்தசுகளையும் எச்சங்களையுங் கிருதுக்களையும் விரதங்களையுங் கழிந்ததையும் எதிர்வதையும் வேதங்கூறுமனைத்தையும் இவ்வுலகத்தினையும் மாயையையுடைப்பொருளாசு வுடைய இவன் அதுகொண்டு சிருட்டிப்பன் இவன்மாட்டு ஏனோர் மாயையாற் கட்டுண்டார்" என்றற்றொடக்கத் தேனைமந்திரங்களுஞ் சிவபிரானுக்குக் காரணத்தன்மையையுணர்ப்பனவென்றறிக. இம்மந்திரோபநிடதம், மந்திரங்களனைத்தானும் ஆண்டாண்டு 'அரன்' 'சிவன்' உருத்

திரன்' 'மகேசுரன்'முதலியபதங்களாலுணர்த்தப்பட்ட சி
வபிரானுக்கே முழுமுதன்மையையும் அனைத்தையு மதிட்
டிப்போனுந்தன்மையையும் எழுவாய்தொடங்கி யிறுவாய்
காறும் எடுத்துரைப்பக்காண்டும்.

இவ்வுபநிடதத்தி னுபக்கிரமத்திற் "காரணப்பிரமம் யா
து? எதன்பாற் றோன்றினோம்? எதனால் உயிர்வாழ்கின்றோ
ம்? யாண்டு நிலையுற்றோம்? சுகதுக்கங்களை எவரானனுபவி
க்கின்றோம்? பிரமவித்துக்காள் யாங்கூடியாய்ந்து துணிது
ம்" என்னுமந்திரத்தாற் பிரமஞ் சகத்தினுற்பத்தி முதலிய
வற்றிற்குக் காரணம் அனைத்தையுமதிட்டிப்பதென்று தெளி
ந்தாராயினும், அப்பிரமப்பொருள் எத்தேவவடிவிற் றென்று
சிறப்பாக அறியமாட்டாராகிய (சகமனைத்தின் றோற்றநிலை
யிறுதிகளுக்குக் காரணமானதூஉம் அனைத்தையு மதிட்டிப்
பதூஉமான வப்பிரமப்பொருள் எத்தேவவடிவிற்றெனவெ
ழுந்த) பிரமவாதிகளான விருடிகளுடைய இவ்வையப்பாட்
டினைக், "காரணப்பிரமம் யாது" என்றற்றொடக்கத்து வினா
க்கூற்றுக்களாற் பொதுவாகவுஞ் சிறப்பாகவுந் தெரித்துக்,
காலஞ் சுபாவம் நியதி மாபூதம் † பிரதானம் புருடன் இ
வற்றது சமுதாயமென்பனவற்றுள் ஒன்றைச் சகங்காரணமா
க வுடைத்தாதல் உண்டென்றாக யதிரிச்சையால் உண்டாய
தென்று காரணமில்லையென்றாகப் பொருத்தமுண்டாய்ப், பி
ரமங் காரணமென்பதே பெறப்படாதென்று ஐயப்பாடு
நிகழ்தற்குப் பற்றுக்கோடில்லையாலோ வென்னுஞ் சங்கை
நிகழாவண்ணம், ஐயப்பாடு நிகழ்தற்கு இட னுண்டென்
றுணர்த்தும்பொருட்டு, அவர்தாமே காலமுதலியன கா
ரணமாதலை மறுத்தோதியவாற்றினைக், "காலஞ் சுபாவம்

† பிரதானமென்னும்பிரகிருதியென்னுமொக்கும்.

நியதி யதிரிச்சை பூதங்கள் பிரகிருதி புருடன் காரண மென்பது எண்ணமாத்திரையேயாம். இவற்றது சமுதாயமு ங் காரணமாகாது, இவற்றை நுகர்தற்கு ஆன்மா இவற்றின் வேறாக வுண்மையின். ஆன்மாவுங்காரணனாகான், இன்பத் துன்பங்களுக்கு வசியனாதலின்." என்னுமந்திரத்தால் அறி வுறுத்தித், தாமே துணியமாட்டாராய்ப், 'பிரமஞானத்தை வழங்குதலையே தொழிலாகக் கொண்டருளிய அம்பிகையா ன பராசத்தியின் திருவருளினால் இப்பொருடுணியற்பாற் றீ'என்றுஅப்பராசத்தியைத் தியானிக்கலுற்றார்க்குப்,பராசத் தி வெளிப்பட்டருளியதைத், "தன்குணங்களானிரம்பிய அ த்தேவசொரூபசிற்சத்தியைத் தரிசித்தனர்" என்னுமந்திரத் தால் அறிவுறுத்தி, அதன்பின்பு "காலம் ஆன்மா முதலிய காரணமனைத்தையும் எவனதிட்டிக்கும்" என்றெடுத்து "அ வனைத்தரிசித்தனர்" என்னும்வினைமுற்றோடுகூடிய மந்திர த்தானே அப்பராசத்தியின் திருவருளாற்போந்த கால முத லிய துணைக்காரணத்தொகுதியை அதிட்டிக்கு முழுமுதலா ன பரப்பிரமப்பொருளைச் சிறப்பாக அவர்துணிந்ததனை யு ணர்த்திப், பின்னர்ப் "பிரதான மழிவுடைத்து அமிர்தன் அழிவிலி சரத்தையுமான்மாவையு மொருமுதலதிட்டிக்கும்" என்றற்றொடக்கத்தனவற்றாற் சிவபிரானுக்கு முழுமுதன் மையும் அனைத்தையு மதிட்டிப்போனுந்தன்மையும் உபநி டதத்தான் விரித்துக் கூறுதலின் "ஒருபாக்கியான யாப்பி னானே "எதன்பால்" என்றற்றொடக்கத்துச் சுருதிகளிற் போந்த காரணப்பிரமஞ் சிவபிரானேயென்பது சிறப்பான் முடித்துக் காட்டப்பட்டது.

அற்றேல், "காரணப்பிரமம் யாது" என்றற்றொடக்கத்து ஐயவுரைகளிற் காரணப்பிரமஞ் சிவபிரானேயோ மற்றொ

ருகடவுளேயோ வென்னுமையவடிவு எடுத்தோதப்படவில்லை ; துணிபுரையினுங் காரணப்பிரமஞ் சிவபிரானென்று எடுத்துக்காட்டப்படவில்லை; ஐயவுரையுந் துணிபுரையும் பொதுவாற்றனேபோதராநிற்ப, இவ்வுபாக்கியானங்காரணத்தன்மைக்கும்அதிட்டிக்குந்தன்மைக்குஞ் சிறப்பால் ஓர்கடவுளின்கண் முடிபுரைக்குமென்பது யாங்ஙனமெனின் ; —கூறுதும்:— காரணம் பிரமமெனத்துணியப்பட்டவழி அதன்சிறப்பியலை அறியலுறவேண்டி ஐயப்பாடெழுந்ததெனின், அஃது பொருந்துமாற்றானும், பிறிதாறில்லாமையானும், கிளந்து ஒருபொருளைச்சுட்டி யெழுந்ததாதல்வேண்டும். முழுஉபநிடதத்தானும் முழுமுதன்மையும் அனைத்தையுமதிட்டிக்குந்தன்மையுஞ்சிவபிரானுக்கேகூறப்படுதலின், துணிபுரையுஞ் சிவபிரானையுணர்த்துவதாய்ப் பொருத்தமுடைத்தாம். தான்கூறற்கமைந்தபொருளின்கட்கேட்பார்க்குஅறிவினிதுதித்தற்பொருட்டன்றேவேதத்தில் உபாக்கியானங் கூறப்படும்;"பாரிப்பிலைவப்பொருட்டெனினமையா—தியைபாற்கிளந்தெடுத் திசைத்தலான" என்னுமுத்தரமீமாஞ்சையதிகரணத்தில் உபாக்கியானங்கட் கவ்வாறு பயனுரைக்கப்படுதலின். கூர்மபுராணததினும் இவ்வுபாக்கியானத்திற்குச்சிவபிரானுடைய காரணத்தன்மைமுதலியவற்றைத் துணிதற்கண்ணே தாற்பரியஞ் சுருக்கிக்காட்டப்பட்டது:—பெரியோரும் பிரமவாதிகளுமான்முனிவர்தலைக்கூடி ஆன்மவிஞ்ஞானத்தைப்பற்றிப் பலவாதங்களைச்செய்தனர், இந்தச்சகத்துக்கு மூலம்யாது ? நமக்கான்மாவானோன் யாவன் ? பூதங்களனைத்திற்கு மேதுவானோனு மதிட்டிப்போனோனும் யாவன் ? என்றிங்ஙனமுசாவுற்றுத்தியானத்தொழிலைப்பற்றிநின்றார்க்கு, மலையரசன்மகளுங் கௌரியுமானமாதேவி வெளிப்பட்டருளினள்" என்றுதொடங்கி "அவர்பரமேசுவத்தினியாற் றிருக்கண்சாத்தப்பட்டு அவ்வழி

அனைத்திற்குமேதுவானோனும் அதிட்டிப்பானும் கவியும் பரி பூரணனும் புராணபுருடனும் உருத்திரனுஞ்சய்புமானதேவ னைக் கண்ணுற்றனர்'' என. இவ்வாறு இவ்வுபநிடதத்திற்கார ணமானபிரமப்பொருள்சிவபெருமானேயென்று உபாக்கியா னவியாசத்தாற்றுணோநாட்டுதலானும், ''எப்பொழுதிருளிருந் தது'' என்னுமந்திரத்திலே காரணவாக்கியங்கள் அனைத்திற் குஞ் சிவபரத்துவ மெடுத்தோதப்படுதலானும், மற்றொருகட வுட்கண் முடிவுபோதருமாறு சாகபசுநியாயத்தை உபந்நியா சஞ்செய்த பராது சம்பிரமம் வாளாபோயிற்று.

''எவன் கடவுளர்க்கு என்னு மந்திரமுங் கடவுளரெவர்க்கு முதல்வனை இரணியகருப்பனைத் தோற்றுவித்தலபற்றிச் சி வபிரானுக்கு முழுமுதன்மையை எடுத்தோதும். இது ''நாரா யணன்பானின்றும் பிரமன்றோன்றும்'' என்பதற்கனுவாதமா காது, ''பசுபதி இரணியகருப்பனைத் தோற்றுவிக்கும்'' என் னுமிவ்வுபநிடதப்பொருள் அந்நாராயணோபநிடதத்தாற் பெ றப்படாமையின். பெறப்படாதாகவே, 'யத்' சத்தமாயிரங் கூடினும் அனுவாதங் கற்பித்தல் செல்லாது. ''யாது அங்கி யைத்தெய்வமாகக்கொண்ட அட்டாகபாலம்'' என்றற்றொட க்கத்து மந்திரங்கள் 'யத்' சத்தத்தோடியைந்தும் அப்பொரு ள்பயக்கு முறையளவையில்லாமைபற்றித் தாமே விதியுரை யாயொழிதலின். அஃதேல், 'உருத்திர' பதம் நாராயணனை இலக்கணையா னுணர்த்துமெனக்கொள்ளின், ''நாராயணன் பானின்றும் பிரமன் றோன்றும்'' என்னுமந்திரத்தாற்பேறெ ய்துமெனின்;—அற்றன்று, ''யாதுஅங்கியைத் தெய்வமாகவு டையவென்றற்றொடக்கத்தனுவற்றில் அங்கிமுதலிய பதங்க ளும் ஒருகடவுளை இலக்கணையா னுணர்த்துமெனக்கொண்டு அப்பேறுபயக்கும் உளாயளவை யுண்டெனப்பட்டு அவை

தாழும் அநுவாதங்களாய் முடிந்து மீமாஞ்சைநூன்முழுதும் இடர்ப்பாடுடைத்தாமாகலானும், 'உருத்திர' பதத்திற்கு நாராயணன்கண் இலக்கணைபெறப்பட்டவழிப் பேற்றினைப்பயக்கும் பிரமாணம் போதருதலின் இஃதநுவாதமாம் அநுவாதத்துணியப்பட்டவழிப் புரோவாதத்திற் கேற்ப உருத்திர பதத்திற்கு இலக்கணைகற்பிக்கற்பாற்று என ஒன்றனையொன்று பற்றுதலென்னுங் குற்றம் வருதலானுமென்க.

இனி இருவரும் இரணியகருப்பனுக்குக் காரணராகுதல் பெறப்படாதவழி வேறுசுருதிகளிற் கேட்கப்படும் 'உருத்திர நாராயண' பதங்களுளொன்றற்கு இலக்கணைகூறல் இன்றியமையாமையின், 'யத்' சத்தவியையபானே உருத்திர பதத்துக்கே நாராயணன்கண் இலக்கணை கற்பிக்கற்பாற்றென்று ஆசங்கித்தல் செல்லும் ; அண்டம் பதுமமென்பனவற்றிற்குக் கற்பபேதத்தாற் காரணத்தன்மை பெறப்படுதல்போல இருவருக்குங்காரணத்தன்மை பெறப்படுவதாகவும்,அங்ஙனமிலக்கணை கற்பித்தல் செல்லுமா றியாங்ஙன மென்பது. இனிஅவைதிகர் இந்தமந்திரஞ் சிவபரமாமென்றொப்பியும், "பெரிய விருடியான வுருத்திரன்—பெரிய பார்ப்பானென வுருத்திரனென்றவாறு: யோகவலியானே முக்காலநிகழ்ச்சிகளையும் பார்க்கவல்லவுருத்திரன் றானுதிக்குமுற்றானே யோகவலியால் காராயணன்பானின்றுந்தோன்றும் இரணியகருப்பனைத் தோன்றுமவத்தையனுகவே கண்டான்" என்றுபொருளுரைப்பர். அதுவுந் துச்சமாம், சுவேதாச்சுவதரத்தில்"இரணியகருப்பனை முன்னர்த்தோற்றுவித்தனன்" என்னுமிம்மந்திரம் படிக்கப்படுதலின் அதற்கேற்குமாறு ஈண்டுத்தன்பானின்றுந் தோன்று மிரணியகருப்பனை உலகினைப்படைக்கும் பொருட்டு ஆணைநோக்கிறைற் பார்த்தருளினனென்னும்பொ

ருனே யொப்பிக்கோடற்பாலதாகலானும்; "பரமகாரண
னும் விச்சுவாதிகனும் இருடியும் பிரபுவுந் தானுமாமான் சிவ
பிரான் அவ்வியத்தத்தினீங்கிச் சற்காரியகாரணங்களோடு
வெளிநின்றருளினன் முகத்தினின்றுந் தோன்றிக் கடவுளர்
க்கெல்லா முதல்வனாகிய பிரமக்கடவுளை முதற்கண்ணோக்கி
ஆணைதந்தருளினன் அத்தேவநாதன் உருத்திரன் றிருநோக்
குற்றுச் சகமனைத்தையும் படைத்தனன்" என்று இலிங்கபு
ராணத்து அங்ஙனம் வந்த உபபிருங்கணத்தானுமென்
க. இனி "வேதத்தின் றொடக்கத்தில்" என்னு மந்திரத்தி
ற்கு நாராயணபரத்துவங்கூறியது பிரகரணத்தோடும் இயை
யாதாம், "*தாதுப்பிரசாதத்தான் மகத்தானபிரமமாகவும் ஈச
னாகவும்" என்று பிறரிடத்துஞ்சென்று பொதுவாதற்குடன்
படாத யோகரூடியான 'ஈச'சத்தத்தாற் றொடங்குதலானும்,
'விச்சுவாதிகனும் பெரியவிருடியுமானவுருத்திரன்' என்று இ
டையே சுட்டுதலானும், பிரகரணஞ் சிவபரமென்று துணியப்
படுதலின். இம்மந்திரவிதேயத்தோடும் இயையுமாறில்லை, "எ
வன் பரன் அவன் மகேசுரன்" என்புழி, மேற்கூறியாங்குச்
சிவபிரானுக்கே சிறப்பான 'மகேசுர' பதத்தானே 'எவன்
பரன்' என்றெடுத்தனுவதித்தபரனுக்குச் சிவரூபத்தைவிதித்
தற்கட் டாற்பரியந் துணியப்படுமாகலின், அனுவதிக்கப்படு
ங்கூற்றொடும் பொருந்தாது; பரர் கூறுமாறு கொள்ளினும்
பிரணவத்தின் பகுதிப்பொருளென்று கோடற்பாலதாம்;
பிரணவத்திற்குப் பகுதி அகாரமன்று, "வாக்கெல்லாம்அகா
ரமாம்" என்னுஞ் சுருதி "ஓங்காரத்தால் வாக்கெல்லாம்வியா
பிக்கப்படும்" என்னுஞ்சுருதிபோலத்துதியாகலின். மற்றென்
னையோவதற்குப்பொருளெனின் ;— "மாத்திரையைமாத்தி

* தாதுப்பிரசாதத்தான் என்பதற்கு இந்திரியவுபசாரத்தாலென்று பொருள்கூறுக.
இதற்கு இப்பொருள் அவ்வுபநிடதபாடியத்திற்கண்டது.

ரையைமற்றொருமாத்திரையாகச்செய்து" என்றுதாபநீயோ பநிடதத்தும்பின்பின் மாத்திரைகளுக்கு முன்முன்மாத்திரை களில் ஒடுங்குதல் கூறுதலானும், பாகவதத்திற் "பிராமணச மாதியுற்றபரமேட்டியான பிரமனுடைய விருதயவாகாயத்தி னின்று நாதந்தோன்றிற்று" என்றெடுத்து மேலே "மூக்கூ ற்றோங்காரந் தோன்றிற்று" எனக்கூறுதலானும், "எது இத ன் இறுவாயில் நான்காவதான அரைமாத்திரை" என்று அத னது அரைமாத்திரையெனப்பட்டுப் பிரணவத்தின் சூக்கும வடிவத்தைவடிவாய் வழங்கு நாதமே பிரணவத்தின் பகுதி யாம். நாராயணன் அதற்குப் பொருளாகமாட்டான். "இங்ங ன மூன்று மாத்திரைகளானே இதுதான் முத்தொழிற்பொ ருள்களனைத்தையு முணர்த்திச் சிவபரமான்மாவை அரை மாத்திரையானே யறிவுறுத்தும்" என்றற்றொடக்கத்துப் பு ராணவசனங்களால் அது சிவபரமாதறுணியப்படுதலானும், அனுவாதக் கூற்றிற்கும் அதுவேபொருளென்னும் யாப்புறவி ன்று. வேறுற்றுஞ் சிவபரத்துவம் இனிதுபுலப்படுமாறு இதற்குப் பலவாறு பொருள் கூறலாமென்பதூஉஞ் சிவதத்து வவிவேகத்தில் விரித்துரைத்தாம். ஆகலின், இம்மந்திரம் பிர கரணத்தானும் விதியநுவாதங்களதியைபானுஞ் சிவபரமேயா ம். ஆகவே, அவ்வனுவாகத்திடையே விதிக்கப்பட்ட நா ரவுபாசனையும் மற்றொருவிடயத்தைப்பற்றுது. இனி நாரா யணனை அடுத்தஅனுவாகத்திற்றுதித்தது அவனை உபாசகர் கோடியுள் அடக்குதற்பொருட்டென்று சதுர்வேததாற்பரி சங்கிரகத்திற் சுதரிசனாசாரியசரணர் நாட்டியருளினர். பூர் வாசாரியர் விரித்ததனை ஈண்டுமெறித்துமுரையாம், விரியுமாக லின்.

அதர்வசிகையும் அவ்வாறே சிவபிரானது முழுமுதன்மை யைப் புகழ்ந்தெடுத்தோதும். " ஆண்டுப் பகவனே முதற்க

ட்டியானமாகவுந் தியானிக்கப்படுவதாகவும்பிரயோகிக்கப்பட்டதியாது? தியானந்தான்யாது? தியானிப்பான்றான்யாவன்? தியானிக்கப்படுபவன்றான் யாவன் ?" என்று உபக்கிரமத்திலெழுந்தநான்கு வினாக்களுக்குமுறையே "ஓங்காரமெழுத்தே தியானமாகவுந் தியானிக்கப்படுவதாகவும் விதிக்கப் பிரயோகிக்கப்பட்டது" என்பதொருவாயாகத் "தியானிப்போனுருத்திரன்" என்பதிருவாயாக மூன்றுவினாக்களுக்கும் விடைகூறியபின், தியானிக்கப்படுவோனைத் துணியும்பொருட்டுப், "பிராணனை மனத்திற் கரணங்களோடு நாதாந்தத்திற் பரமான்மாவினிடத்துச்செவ்வேபிரதிட்டைசெய்து மிகவுந்தியானிக்கத்தக்க ஈசானனைத்தியானிக்க" இவையனைத்தும் பிறக்கின்றன இப்பிரமன் விண்டு உருத்திரன் இந்திரனென்னுமவரெல்லாம் பிறக்கின்றனர் பூதங்களோடு இந்திரியங்களெல்லாம் பிறக்கின்றன காரணங்களைத் தோற்றுவிப்பானுந் தியாதாவுமான காரணன்றான் பிறப்பானல்லன் காரணப் பொருளும் ஐசுவரியமனைத்தையுமுடையானும் அனைத்திற்குமீசானுமான சம்பு ஆகாயநடுவிற் றியானிக்கப்படும்" என்றற்றொடக்கத்தனவாக இங்ஙன மோதப்பட்டது. ஆண்டு "ஈசானனைத் தியானிக்க" வென்று சிவபிரானுக்குத்தியானிக்கப்படுந் தன்மையை ஒருதலைப்படுத்தோதி, அவனையொழிந்தொழிந்தகடவுளரெல்லாரையுநீக்கி, அவனுக்குத் தியானிக்கப்படுந்தன்மையைநாட்டி வலியுறுத்தும்பொருட்டு, "இச்சகமனைத்தும்பிறக்கின்றன" "இப்பிரமன்விண்டுஉருத்திரன்இந்திரன்" என்றுகடவுளருள்வைத்துப் பிரமன்விண்டுஉருத்திரனிந்திரனென்பாரைக்கிளந்துமுற்கொண்டுரைத்து 'அவரெல்லாம்பிறக்கின்றனர்' என்றற்றொடக்கத்தனவற்றால்அவர்தமக்கும் பூதமிந்திரியமுதலியவற்றோடொப்பப் பரமேசுரன்பாற்றோற்றங்கூறுதலானும், 'காரணன்றோற்றுவானல்லன்" காரணங்க

ளைத்தோற்றுவிப்பான்" என்று அவர்க்கெல்லாங் காரணனாகிய சிவபிரானுக்குத் தோற்றரவின்மையையுரைத்தலானும்; கடவுளரெல்லாரினுஞ் சிவபிரான் சிறந்தானாதலை யறிவுறுத்தி, ஏதுக்களானே அவனது தியானிக்கப்படுந்தன்மையைக் "காரணன்றான் றியானிக்கற்பாலன்" என்றற்றொடக்கத்துயர்ந்திரத்தானமறிந்தும் முடித்துக்கூறிற்று. 'பிறப்ப' வெனப்பிரமாதியர்க்குப் பூதேந்திரியங்கட்குந் தோற்றயாத்திரையே கூறப்பட்டது; சிவபிரான்பாற்றோன்றுதல்கூறிற்றில்லைபாலோவெனின்;- அஃதொக்குமன்றாயினும், பிரதியோகியையவாய்நிற்கும் பொருள் சொல்லாற்கூறப்படாதவழி அண்மைப்பொருள் பிரதியோகியாக இயைத்துக்கூறற்பாலதாம், ஒன்று கொடுக்கத்தக்கது பன்னிரண்டு கொடுக்கத்தக்கன இருபத்துநான்கு கொடுக்கத்தக்கன ஆயிரங்கொடுக்கத்தக்கன அளவிறந்தன கொடுக்கத்தக்கன" என்றற்றொடக்கத்து ஆதானதக்கிணையை விதிக்குங் கற்பவேறுபாட்டுச்சுருதியிற் பிரதியோகியை அவாவிப் பன்மைப்பொதுப்பொருளையுணர்த்தும் "அளவிறந்த" வென்னுஞ்சொல் அணித்தான ஆயிரத்தின்மிக்க பன்மையின் முடியுமென்பது, "மிகுதிப்பொருளாம்பன்மை நுதலிற்—பிறவற்றோடேயண்மைநிலைபெறினே" என்றுபூர்வதந்திரத்திற் றுணியப்படுதலின், அண்மையுண்மையின் ஈசானபதமே காரணமாகஅன்னுவயிக்கற்பாலதாம். அற்றாகலினன்றே "காரணங்களைத்தோற்றுவிப்பானுந் தியானிப்பானுமானகாரணன் பிறப்பானல்லன்" எனவும், "காரணன்றான்றியானிக்கற்பாலன்" எனவும், அடுத்தவாக்கியங்களிரண்டனும் அச் சிவபிரானுக்குக் காரணத்தன்மையைக்கிளந்தெடுத்தோதியதூஉமென்க. இதனானே, "காரணன்றான்றியானிக்கற்பாலன்" என்புழிக் காரணபதம் சுபாலோபநிடதமுதலியவற்றால்அறியப்படுங்காரணத்தை அனுவதிக்குமென்றுகற்பித்தகற்ப

லை ஒழிக்கப்பட்டது; முன்வாக்கியத்திற் றான் கூறிய காரணம் அனுவதிக்கப்படுவதாய்நிலைபெற அதனையொழித்து மற்றொருசுருதியின்முகத்தை நோக்குதல் செல்லாமையானும், ஈண்டைக் 'காரண' பதம் அபரிமிதாதிசயணங்யாயத்தானே அன்மையிற்கிளந்த காரியத்தன்மையையுடைய 'பிரமன் விண்டு உருத்திர' னென்னும்பதங்களினிது விளக்குங் குணமூர்த்திகளான மூவருக்குங் காரணமானபொருளை உணர்த்துதலின் அப்பெற்றித்தான காரணஞ் சுபாலோபநிடத முதலியவற்றானே நாராயணனுக்குப் பெறப்படாமையானும், "ஈசானனைத்தியானிக்க" என்னுமுன்வாக்கியத்திற்றானே தியானிக்கப்படும்பொருளைத் துணிந்தமையின் அதனைமுடித்தலையே பொருளாகக்கொண்டெழுந்தவாக்கியத்திற்கு மற்றொருபொருளுரைத்தல் பொருந்தாமையானுமென்க. ஆகலின், அதர்வசிகைதானுஞ் சிவபிரானுடைய முழுமுதன்மையைப் புகழ்ந்தெடுத்தோதுமென்றது பொருத்தமாதலறிக.

"இப்பிரபஞ்சம் முதற்கண் யாவனொருவனையாணிலையிற்று, புவனத்தைத் தலையளிக்குங் கடவுளர் எவன்பானின்றுந் தோன்றினர் இப்புவனம் பிரளயத்தில் எவன்பாலொடுங்கும்" என்றற்றொடக்கத்து ஆயுசிய மந்திரமுதலியனவும் பகவனான பரமேசுரன் சகத்தினுற்பத்தி முதலியவற்றிற்குக் காரணனென்றற்கட் பிரமாணமாம். அவ்வாறே சிவபுராணமுதலியவற்றினும் "எவன்பானின்றும் பிரமன் விண்டு உருத்திரன் இந்திரன் முதலிய இவரெல்லாம் பூதேந்திரிய மனத்தோடும் முதற்கட்டோன்றினர் அந்த மாதேவனுமீதவன் மகேசுரனென்றறியப்படும் அவனுக்கு மேலாக ஒருபதமுண்டென்பதுஅறியப்படவில்லை. விசித்திரத்தொழி

லையுடைய இவனானேமுதற்கட் சகந்தோற்றுவிக்கப்பட்டது
அஃதிறுதிக்காலை அவன்பான் மறித்துமொடுங்கும்'', என்றற்
றொடக்கத்து வசனத்தொகுதி பரமசிவன் சகத்தின் றோற்
றமுதலியவற்றிற்குக் காரணனாதலை விரித்துக்கூறும்.

இனி ஈண்டுப் பரரானே சிவபுராணங்கள் தாமதத்தன்மை
பற்றிப் பிரமாணவலி பெரிதுடையனவல்ல வென்றற்கண்
மற்சபுராணவசனத்தொகுதி எடுத்துரைக்கப்பட்டது. அது
பிரமன் விண்டு முதலியோர் ஒருவரொருவர் உயர்ந்தாரா
குலைக்கூறும் புராணங்கள் வெவ்வேறு கற்பங்களிலுள்ள அவ்
வவருயர்ச்சியைப் பொருளாகக்கோடல்பற்றிப் பிரமாண
ங்களாமென்று கூறுதற்கெழுந்தது. வைதிகவழிப்பகைஞர்
பிதற்றுமாறு சிவபுராணங்களுக்கு அப்பிரமாணத்தன்மையை
ச் கூறுதற்கெழுந்ததன்று. "வயங்குமங்கிசிவன்பெருமான்மி
யம்" என்றற்றொடக்கத்தனவற்றில், அவ்வக்கடவுளருயர்ச்சி
அவ்வக்கற்பங்களிலுள்ளனவென்று கூறுதலின், அதனை வி
டயமாகவுடைமைபற்றிப் புராணங்களுக்கு மாறுபாடின்மை
தெற்றெனப் புலப்படுதலின். அஃதேல், அவ்வாறாயிற் கற்ப
ங்களுக்குத் தாமதமுதலியவேறுபாடு கூறுதல்பயப்பாடின்று
ம், அவ்வக்கடவுளருயர்ச்சி கற்பவேறுபாட்டிலுள்ளனவென்
று கூறுதன்மாத்திரையானே புராணங்களுக்கு மாறுபாடின்
மை பெறப்படுதலினெனின்;—அற்றன்று, ஒவ்வோரிருதுவி
ற் பனிமுதலியன மிக்குநிகழுமாறுபோல ஒவ்வோர் கற்பத்
திற் றமோகுணஞ் சத்துவகுணமுதலிய மிக்குநிகழுதலிற் றா
மதமுதலியவேறுபாடு அவ்வக்குணமிகுதிப்பாட்டை உரிமை
யாகக்கோடலின் உபாதியினுயர்வானே உபாதியையுற்றபொ
ருட்கு உயர்ச்சிபொருந்துமென்னும்பொருத்தவலியாற் றாமத
முதலியகற்பங்களிற் சங்காரவுருத்திரன் முதலியோர்க்கு

உயர்ச்சிபொருந்துமெனப்பட்டு அவ்வேறுபாட்டிற்குப் பயனுண்டாகலானும், "தியானந் தவம் ஞானமென்பனவற்றை யோகிகள் அக்காலங்களிற்றானே எய்தப்பெற்று என்னையுங் கிரீசனையும் ஆராதித்து அப்பரமபதத்தினையெய்துகின்றனர்" என்று சாத்துவிககற்பங்களைப் புகழ்ந்தெடுத்தோதுங் கூர்மபுராணவசனத்தானும், "அக்காலங்களிலே யோகசித்தியுடையார் பரகதியினைத்தலைக்கூடுகின்றார்" என்னும் ஈண்டைவிசேடவசனத்தானும், சாத்துவிக கற்பங்கள் தவச்செயன்முதலியவற்றிற்கு உயர்பொழுது உயர்வில் பொழுதுகளை ஒத்தல்பற்றிப் பயன்படுதலானுமென்க.

அற்றேலஃதவ்வாறாக; "எப்புராண மற்றெக்கற்பத்தே" என்றெழுந்தசுலோகம் பயப்பாடின்றாம், அஃதின்றியேயுஞ் சைவமுதலிய புராணங்கள் தாமதமுதலியகற்பவிடயமாதல் போதருதல்கொண்டு மாறுபாடின்மை பெறப்படுதலினெனின்;—அற்றன்று, "வயங்குமங்கிசிவன்பெருமான்மியம்" என்றற்றொடக்கத்துவசனங்களானே தாமதமுதலியகற்பங்களிற் சிவன்முதலியோர்க்கு மகிமைகளை மிகுத்துரைக்கின்றாரென்றன்மாத்திரையே கூறத்தகும், அதுபற்றிப் புராணங்கள்வெவ்வேறுகற்பவிடயமாதல் பெறப்படாதெனப்பட்டு அவற்றிற்கு நிகழுமோர் கற்பவிடயமாகுகை வருமென்னுஞ் சங்கைபற்றி மாறுகோளுணர்வு அவ்வாறேநிலைபெற, அதனையொழித்தற்பொருட்டு "எப்புராணமற்றெக்கற்பத்தே" என்பதாதியாகவருஞ் சுலோகத்தானே அவை வெவ்வேறு கற்பவிடயமாதல் கூறற்பாற்றாகலினென்க. அங்ஙனங்கொள்ளினும் 'புராணங்கள் அவ்வக்கற்பங்களிற் பிரமனாலோதப்பட்ட'தென்னும்பாதம் நின்றுவற்றும், அவைதம்மையே அனுவதித்து அவைதாம் வெவ்வேறுகற்பவிடயமாதலைக்

கூறுதனையாதிரையானே ஒதியபயன்நிரம்புமிறவெனின்;— அறறனறு, "அப்புராணமற்றெக்கற்பத்தேயயன்செப்பநின்றது" எனபுழிச் 'செப்பநின்றது' என்னும்பதம் அவ்வக்கற்பங்களிற் சொல்லப்படுதலைக்கூறிற்றன்று; மற்றென்னையோ கூறிபதெனின்;—"அவனாற்சொல்லப்பட்டது" என்னும்பாணினிசூத்திரத்திற்போந்த 'சொல்லப்பட்டது' என்னும்பதம்போல வெளிப்படுத்தன்மாத்திரையே கூறிற்றென்க. மற்சபுராணமெ "சாத்திரங்களனைத்திற்குமுன்னாகப் புராணங்கள் பிரமனாற்சிந்திக்கப்பட்டன அதன்பின்பு அவன்முகங்களினின்றும் வேதங்கள்வெளிப்பட்டன புராணம் நூறுகோடி கிரந்தங்களுடைத்தாய் ஒன்றாயிருந்தது" என்பதெழுவாயாக "அதன்பொருள் ஈண்டு நான்கிலக்கங்கிரந்தங்களாகச் சுருக்கி வைக்கப்பட்டது", என்பதிறுவாயாகவிரித்து, "ஆதிசிருட்டியிற்படுங்கிருதயுகத்தில் வேதங்களைவெளிப்படுத்துஞ் சமயத்திற் பிரமம் பதுமமுதலியவாகவழங்கும் வேறுபாடின்றி நூறுகோடி கிரந்தப்பரப்புடையதாக வொருங்கே பிரமனாற் றெரிக்கப்பட்டது அதுவே திரேதாயுகத்தில் மறித்தும் பிரமாமுதலிய இருடிகள் பதினெண்மரால் பதினெட்டாகப் பிரித்துக் கோடிகிரந்தங்களாகச்சுருக்கப்பட்டது அதுவே துவாபரயுகமுடிவின் மறித்தும்வேதவியாதனால் நான்கிலக்க கிரந்தங்களாகச் சுருக்கப்பட்டது" என்று ஓதுதலானும், தருமசங்கிதையினும் "ஆதிகிருதயுகத்திற் சுருதியோடொற்றுமையுடைய பிரமபுராணமொன்றேயிருந்தது அது பதினெட்டுபகுப்பாற்கோடிகிரந்தங்களாகச் செய்யப்பட்டது" என்றற்றொடக்கத்தனவற்றால் அவ்வாறேகூறுதலானுமென்க.

இங்ஙனங் கூறியவாற்றாற் பிரமனாற் சிலகற்பங்களிற் சில புராணங்கள் "அங்கமாக வெளிப்படுத்தப்பட்டன" வென்னு

மபாதமும், அவ்வக்கற்பத்திற் சிறக்குந் தேவர்களின்மகிமை யைக்கூறும் புராணங்களை அவ்வக்கற்பங்களில் வெளிப்படுத் துதலினையுமென்றுபெருந்துமாற்றானே ஓர்கற்பத்திலொரு கடவுளினுயர்ச்சியை வலியுறுத்திப் பயன்படுவதேயாம். இத ளானே வசனங்களெல்லாமொன்றுபடுதலின், எடுத்துக்காட் டியமற்சவசனம் புராணங்களனைத்து மாறுபாடின்றிப் பிரமா ணமாதலை நாட்டவெழுந்ததென்றுகூறியது பொருத்தமாம். இப்பொருள் சிவபுராணத்துத் தெளிவுறக்கூறப்பட்டது; "இயங்குவனவு நிற்பனவுமான விவ்வுலகத்தின் தோற்றநி லையிறுதிகளுக் கேதுவாகியகாரணன்மாக்கண்மூவரும் மகே சுரன்பானின்று நேராகவுதித்தார் பிரமன்படைப்பிலும் அரி அளிப்பிலும் உருத்திரன்றுடைப்பிலுமாக மூவரு முத்தொழி லினுந் தாதையான்முதற்கணியமிக்கப்பட்டார் அங்ஙனநிய மிக்கப்படினும் ஒருவரோடொருவரழுக்கறுத்துத் தம்முண் மேம்படக்கருதினர் உருத்திரன் றாதையான பரமேசுரனைத் தவத்தாலுவப்பித்து ஓர்கற்பத்தில் முன்னர்ப் பிரமன்நாராய ணனிருவரையும் படைத்தனன் பின்பு சகவடிவனாகிய பிரம ன் மற்றோர்கற்பத்தில் நாராயணன்உருத்திரன் என்னுமிருவ ரையும்படைத்தனன் பின்புபகவனானவிண்டுஉருத்திரனையும் பிரமனையும்படைத்தனன் இங்ஙனங் கற்பந்தோறும் பிரமன் விண்டு மகேசுரனென்பார்ஒருவரை மற்றொருவர்வெல்லக்கரு தி ஒருவர்பாலொருவர் பிறக்கின்றார் பெரியவிருடிகள் அவ்வக் கற்பசரித்திரங்களைவாங்கி அவ்வப்புராணங்களைச்செய்தனர் அறிவுடையான் அவைபற்றி மோகமெய்தமாட்டான்." என. ஆகலின், எடுத்துக்காட்டிய வசனங்களானே பிரமன் நாரா யணன் சங்காரவுருத்திரனென்றிவர்கள் ஒவ்வோர்கற்பங்களி ற் சிருட்டித்தல் சிருட்டிக்கப்படுதன் முதலிய வுடைமை யான் ஒருவரினொருவர் உயர்ச்சிமுதலியு வுடையராதல்

பெறப்படாதேனும், அவர்கட்குக்காரணனுந் துரியனுமான பரமசிவனது கற்பந்தோறு மொருதன்மைத்தானதூஉம் புராணமுதலியவற்றில் விரித்துக்கூறப்பட்டதூஉமாகிய முழுமுதன்மையின்வரம்பு அலையுநீரதன்றாகலின், அதர்வசிகைமுதலியசுருதிகளி னியைபானே சாங்கியமிருதிகளினும் மனுமிருதிமுதலியவற்றிற்குப் பெருவலியுண்டாதல்போலப் பிரபலமுடைய சிவபுராணமுதலியவற்றிலுள்ள வசனங்களானே அச்சிவபிரானுடையமுழுமுதன்மை அலையுநீரதன்றி நிலைபெறுடைத்தாம். பரமசிவனுக்குஞ் சங்காரவுருத்திரவுருத்திரற்குந் தம்முள் வேற்றுமை சிவதத்துவவிவேகத்தில் விளங்கக் காட்டினும்.

இனிமனுவசனத்தொகை யெடுத்துக்காட்டப்பட்டது. அது, "பின்பு சுயம்புவும் பகவனும்" என்றற்றொடக்கத்தானே பிதாமகனையுந் தோற்றுவிப்பானென்னப்பட்ட நாராயணன் "தமோநுதன்:—இருளைப்பிரேரிப்பான்பானின்றும்: (மாயையை யதிட்டிக்கும் பரமசிவன்பானின்றும் என்றவாறு) "தோன்றினன்"—('பின்பு' என்னுஞ்சொல்லால் ஓதப்படும் பிரளயத்திற்குப்பிற்பட்டகாலத்தே) முன்னுதிர்தனன்—என்றுகூறுதலின், பரமசிவனுக்கே முழுமுதன்மையைப் புலப்படுத்தும். "தமோநுத:" என்பது 'க்விப்' என்னும்பெயர்விகுதி புணர்ந்துகெட்டு முதனிலைமாத்திரையாய் நின்றஐந்தாம் வேற்றுமையீற்றுப்பெயராம், "தோன்றினன்" என்றதுனையானேஎவன்பானின்றெனவெழும் அவாய்நிலையோடுஇயைபுபட்டொழுகவேண்டுதலின். இ உ முதலிய வெழுத்துக்களை ஈற்றயலாகவுடையதாதுவின்மேல் 'கவ்' என்னும்பெயர்விகுதிபுணர்ந்து தோன்றுவானுக்கடையாய் முதல்வேற்றுமையீறுதிப்பெயராய் நின்றதன்று; பிற்றோன்றுவானுக்கு முன்னுள்ளவி

ருளை யதிட்டித்தல செல்லாமையானும், மானவதருமசாத்திரத்திறுதியில் "அனைத்தையுமாளுவோனும் அணுவுக்கணுவும் பொன்னொளியுடையனுஞ் சொப்பனபுத்தியானறியப்படுபவனுமாயுள்ளானைப் பரமபுருடனைக அறிதல்வேண்டும்" என்று பரமபுருடனைத்துணிந்து, "இவன் பூதங்களனைத்தையும் ஐவகைமூர்த்திகளானடக்கிப் பிறப்புநிலையிறப்பென்பனவற்றாற் சக்கரம்போல நித்தியஸம்ஸாரம் உறுவிக்கின்றனன்" என்று "உலகனைத்துஞ் சரண்புகுதற்குரிய பரமான்மாவானசிவபிரானுக்கு விளக்கமுற்ற பஞ்சப்பிரமங்களெனப்பெயரிய பரமூர்த்திகளுண்டு" என்றற்றொடக்கத்துப் புராணவசனங்களாற் பெறப்படுஞ் சத்தியோசாதமுதலிய ஐவகைமூர்த்திகளாற்றான் அட்டமூர்த்திகளுட்பட்ட பிருதிவிமுதலிய ஐவகைமூர்த்திகளாற்றான் உயிர்த்தொகையனைத்தையும் வியாபித்து நிற்குமிலிங்கம் ஆண்டுக்கூறுதலின்சிவபிரானே பரனென்பது மனுவிற்குத்தாற்பரியமென்று துணியப்படுதலானுமென்க. தருமசாத்திரஞ்செய்த யோகீசுவரரால் யோகயாஞ்ஞியவல்கியத்தில் "லகாரத்தோடுகூடியவாயுவைப்பிருதிவித்தானத்திற்சேர்த்து நான்குகரங்களோடு பொருந்திய வடிவினையுடைய பரமேட்டியான பிரமனைத்தியானித்து நான்குகடிகைதரிக்கக்கடவன் அத்தாரணத்தாற்சித்தியெய்தும்; வகாரத்தோடுகூடியவாயுவை வருணத்தானத்திற்சேர்த்துச்சுத்தப் படிகம்போல விளங்கும் பீதாம்பரவுடையையுடைய அச்சுதனை ஐந்துகடிகை தாரணஞ்செய்யக்கடவன் எல்லாப்பாவங்களுநீங்கும்; ரேபத்தோடுகூடியவாயுவை அக்கினித்தானத்திற்சேர்த்து இளஞாயிற்றையொத்தவனும் முக்கண்ணனும் வரத்தைக்கொடுப்பவனுமானவுருத்திரனை" என்பதெழுவாயாக "ஹகாரத்தோடுகூடியவாயுவை ஆகாயத்திற்சேர்த்து விந்துரூபனு மாதேவனும் வியோமவடிவனுஞ் சுத்தப்படிகம்போலுமொளி

யையுடையவனும் இளம்பிறைமுடியனும் ஐந்துதிருமுகங்க ளையுடையவனும் சௌமியமும் பத்துத்திருக்கரங்களையுடைய வனும் மூன்றுதிருக்கண்களையுடையவனும் படைகளெல் லாவற்றையுங்கைக்கொண்டவனும் அணிகளனைத்தாலுமலங் கரிக்கப்பட்டவனும் உமையைப்பாதித்திருமேனியாகக்கொ ண்டவனும் வரத்தைக்கொடுப்பவனும் காரணங்களனைத்திற் குங் காரணனுமான சதாசிவனைச் சித்தத்தில்வைத்து ஒருமு கூர்த்தந்தாரணஞ்செய்யக்கடவன் அவனே விதிவழிப்பட்ட தாந்திரிகர்களாலும் முத்தனென்றுசொல்லப்படும்'' என்பதிறு வாயாகவரும் வசனத்தொகுதியாற் பிரமன்முதலாகப் பரம சிவன்காறு முறையானே தாரணங்களைக்கூறிப், ''பிரமஞா னிகளுட்சிறந்தகார்ய்ந் பிரமன்முதலியகாரியப் பொருள்க ளைத் தத்தங்காரணங்களிலொடுக்கிக் கலங்காமனத்தினையு டையையாய் ஆன்மாவைப் பரமேசுவரனிடத்துயோசிக்க'' வென்றுமுடிபெய்தும்பொருளைக்காட்டுதலின் பரமசிவனுக்கு முழுமுதன்மை ஓதப்பட்டமைகாண்க.

பகவனானவாதராயணன் மாபாரதத்திற் சபாபருவத்தும் வீட்டுமபருவத்தும் ''உலகங்களனைத்தையும் படைத்த பழை யோனும் சூரியகாந்தியையுடையனுமானபூதபதி பல்லாயிரம் பூதகணங்களாற் சூழப்பட்டு யாண்டு உபாசிக்கப்படும்'' என்றற்றொடக்கத்து மைநாகப்புனைந்துறைவசனங்களாலும், ''ஈசுவரனும் சேதனனுங் கர்த்தாவும் புருடனுங்காரணப்பொ ருளுமான சிவபிரான் விண்டு பிரமன் சந்திரன் சூரியன் இந் திரன் குலக்கடவுளரென்பாரைப் படைக்கின்றனர் அழிக்கி ன்றனர் இவ்வுலகெல்லாம் இருண்மயமாயறியப்படாது ஒடு ங்கியபின்னர் மகேசுவரனொருவனே யிருந்தான்'' என்றற் றொடக்கத்துச் சாந்திபருவவசனங்களாலும், ''அப்பகவனா

னவீசனே தத்துவங்களனைத்திற்கு முதல்வனும் அழிவிலியும் ஈசுவரனுந் தத்துவங்களனைத்தையும் படைக்கும் அறிவுடையனும் பிரதானபுருடர்க்கீசனுமாம் அவன் உலகினைப்படைக்கும் பிரமனை வலப்பாலினின்றுந் தோற்றுவித்தான் அவ்வீசுவரன உலகினைத்தலையளிக்கும்பொருட்டு விண்டுவை இடப்பாலினின்றும் அவ்வாறு தோற்றுவித்தான் அப்பிரபு பின்னர் ஊழிபெயர்ந்துழி உருத்திரனைத் தோற்றுவித்தனன்” என்றற்றொடக்கத்து நூனுசாசனிகவசனங்களானும், “நானும் பிரமனுங் கபிலனும் அநந்தனுமானவெல்லேமும் பிரமத்தினதியீரபத்திராமேவந்தேவதேவனே உன்பானின்றுமனைத்துந்தோற்றின இங்ஙனமனைத்திற்குமீசனுங் காரணனுமான நீ துதிக்கற்பாலாய்” என்றற்றொடக்கத்துக் கன்னான்கூற்றுக்கிடைப்பட்ட அர்வம்சவசனங்களானும், அச்சிவபிரான் முழுமுதல்வனென்றுவெளியிட்டனன். ஆதலின், பரமசிவனே பரமகாரணனாம்.

இனிச்சுருதியினும் புராணத்தும் பாரதத்து நாராயணனைப் பரமகாரணனென்று ஓதியனவெல்லாம் உண்மையாருகப் பாவனைப்பயத்தினாக அவன்பாட்டுவிளங்குஞ் சிவாபேதத்தைக்கருதி யெழுந்தனவென்றறிக. கண்ணன்முதலியவவதாரங்கள் விண்டுவின்கூறுதல்போலப் பிரமன் விண்டு உருத்திரனென்பார் பரமசிவனுடையகூறுவர். அவர் பரமசிவனின் வேறுகாரெனக்கொள்ளின், கண்ணன்முதலியவவதாரங்களில் நாராயணகுணங்களையுஞ் சரித்திரங்களையும் புனைந்துரையாற்கூறுங்கருத்துப்போல நாராயணன்கட் பரமசிவகுணங்களைப் புனைந்துரைத்தற்கருத்தாலோதிற்றென்று கொண்டியைக்க. அவர் பரமசிவனின் வேறுவரெனக்கொள்ளினும், “பரமேசுவர மாந்திரிகன் கருடபாவனையானே கருடனாதல்போ

ல இப்பதப்பொருளாயுள்ள உன்பாவனையிலழுந்தி உன்னோடொன்றனனி
யனாதல்பற்றிப் 'பரப்பிரமம்' என்றும் 'பரஞ்சோதி' என்றும
'பரதத்துவம்' என்றும் ஓதப்படும்'' என்று சுதசூதாசாரியருப
தேசித்தருளியவாறு ஆண்டு அப்புனைந்துரை இயைபுடைத்
தாம். ஈண்டு மாற்றியுரைக்கலாமென்றல் சங்கையன்று, சகத்
திற்குக்காரணமான பிரமப்பொருட்கு ஒன்றற்கொன்றுமாறு
ன விசேடங்கள் கேட்கப்படின் அந்தச்சுருதி அதனைத்துணி
தலையே தொழிலாக்கொண்டு எழுந்தது அந்தச்சுருதிக்கேற்
பச் சிறந்ததோர்பொருளைத் துணிதல் பொருந்துமாகலின், மற்
றொன்றனைப்பொருளாகக் கொள்ளாதது வலியுடைத்தாகலி
ன். அற்றாகலினன்றே 'பூரணைக்கட்செய்யப்படும் ஆக்கிநே
யம் அக்கினிசோமீயமென்னும் வேள்விகளிரண்டிற்கும் மு
றையானே யனுட்டானத்தைச்செய்யவாவருஞ்சுருதி வசையில் அ
னுட்டிக்கத்தக்கபொருளை உணர்த்தலொன்றையே பயனாகக்
கொண்டமைந்த பாடக்கிரமமே நியமாகத்தைச்செய்யும் அத
னின்வேறான விதியாற்பயன்பட்ட பிராயணபாடக்கிரமமா
தியாகத்தைச் செய்யமாட்டாது' என்று 'பந்திர நியமி
க்குமாறுபடுபொருளின்' என்னும் ''மைமாமத்தியாயவதிக
ரணத்தில் காட்டியதூஉமென்க. அதனாலுஞ் சிருட்டிப்பா
னது உண்மையுஞ் சிருட்டிக்கப்படும் பொருட்டொகுதியும
அவற்றின்முறையுமென்னு மிவற்றைக்கூறிப் பயன்பட்ட சு
பாலோபநிடதமுதலியவற்றிலுள்ள சிருட்டிப்பிரகரணங்களி
ல் அபிதானச்சுருதிவலியான் மற்றொருகடவுட்குக் காரணத்
தன்மைதோற்றினும் ஏனைச்சுருதிகளிற் கூறப்பட்டசிருட்டி
கர்த்தாவினது உண்மைமுதலியவற்றைத் துணிந்தபொருளா
க்கிச் சிருட்டிக்கும் பிரமப்பொருட்கு ஓர்தெய்வவடிவைத்தெ
ரிக்கும்பொருட்டெழுந்த விந்தமந்திரோபநிடதத்து 'அரன்'
'சிவன்' முதலியசத்தங்களாலோதப்படும் பரமசிவன்சகத்தி

னமேருற்றமுதலியவற்றிற்குக்காரணனுமென்றுரைத்தல் வலி
யுடைத்தாகலின் அக்காரணத்தன்மை அவன்பாற்றானே நிலை
பெறுமென்க. இதனானே, சிருட்டிப்பிரகரணத்திலுள்ள 'நா
ராயண' சத்தப்பிரயோகம் வலியுடைத்தென்ற பரர்கொள்
கை கழுத்திற்கையிட்டுத் தள்ளியொழிக்கப்பட்டது. ஆண்டு
நாராயணபதம் பெருவரவிற்றுதல்பற்றி வலியுடைத்தென்று
பரர்கோடறனும்பொருந்தாது, ஆண்டு அஃதுபெருவரவிற்
றாயினும் அப்பொருட்கண்வரும் 'பிராணன் ஆகாயம் அக்
நி'முதலியபதங்கள் வலியிலவாதல்போல அன்னியதாசித்த
மாய் அநன்னியபரமான சுருதியொடுமாறுபட்டு வலியிலதா
ய் ஒழிதலின். இன்னும், அதர்வசிகையில் "இப்பிரமன்விண்டு
உருத்திரன் இந்திரனென்னுமவையெல்லாம் பிறக்கின்றன"
என்றற்றொடக்கத்துரையாற் பிரமன்முதலியோரையுஞ் சிவ
பிரானையும் முறையானே காரியகாரணத்தன்மைபற்றிக் கிள
ந்துகூறியதூஉம், மாற்றியுரைக்கலாமென்றுசங்கித்தலைத் தடுத்
தொழிக்கவற்றுமென்க. நாராயணனையுங்காரியகோடியுளடக்
கிச் சிவபிரானுக்குக் காரணத்தன்மையைக்கூறுவதனை நாராய
ணவிடயமெனக்கொண்டியைத்தல்செல்லாதென்க. அல்லதூ
உம், 'பிரமன்' உருத்திரன்' என்னுஞ்சொற்களுக்கிடையேவை
த்தோதப்பட்ட 'நாராயண' பதத்தை அவனதோர் அவதார
விசேடப்பொருட்டாக்கி யுரைத்தல் பிரமாணமுடைத்தாகா
தென்க. "எப்பொழுதிருளிருந்தது" என்னு மந்திரங் கார
ணவாக்கியமனைத்திற்குஞ் சிவபிரான் பொருளாதலை நேராகநி
ரூபித்துச் சுபாலமுதலியவற்றில் 'நாராயணன்காரண'னெனக்
கூறியதனையுஞ் சிவபிரான் விடயமாகத் தெள்ளிதிற்புலப்படு
த்தும். கூர்மபுராணத்திற் பார்த்தனைநோக்கித் "திவ்வியமும்
நித்தியமுமான ஈசுவரவியையுடைய ஞானத்தை நீ உண்மை
யாக அறிந்தாய் உன்பதிக்குப்போகபோக சோகமெய்தற்க

சரணுதற்குரிய சிவபிரானைப் பரபத்தியாற் சரணடைக" என்று இருடிகேசன்றனே சொற்றனனென்பதுகொண்டு அக்கீதையை ஈசுவரஞானமென்னும் வியாசவசனமும், ஆண்டே ஈசுவரகீதையினிறுதியில் "அரியும்பகவனுந் தேவகிபுத்திரனுமான நாராயணன்றனே இந்த உத்தமஞானநூலினை அருச்சுனற்கு நேராக அளித்தனன்" என்று ஈசுவரகீதையின்பொருளை யாத்துக்கொண்டெழுந்த வியாசவசனமும், கண்ணனுக்கு முழுமுதன்மைமுதலியவற்றைப் பெருப்பான்மைபற்றி எடுத்துக கூறும் பகவற்கீதைதானுஞ் சிவபரமாதலை வெளிப்படுத்தும். "சத்தியமுதலியவற்றை இலக்கணமாகவுடைய அம்பிகையோடுகூடிய ஈசானன் முழுமுதல்வன் விண்டு விரிஞ்சன் உருத்திரன் ஏனைபபுமான் முதலியோர் முழுமுதல்வராகார் சத்தமனே சுருதிகளும் புராணங்களும்பாரதமுதலியவைகளும் அம்பிகையோடுகூடிய சிவபிரானை உட்பொருளாகக்கொண்டுரைக்கும்" என்றற்றொடக்கத்துப் பராசரமுதலியபுராணவசனங்கள் சுருதியினும் மிருதியினும் புராணத்துமுள்ளவசனங்களிற் காணப்பட்ட ஏனைக்கடவுளரைக்குறிக்குங் காரணவாதங்களெல்லாஞ் சிவபரமாதலைத்தெள்ளிதிற்கூறும். ஆகலின், ஏனைக்கடவுளர்க்குக் காரணத்தன்மையைக்கூறும்வசனங்களே பரமசிவன்பான்வந்துமுடிபெய்தும். அப்பரமசிவனுக்குக் காரணத்தன்மையைக்கூறும் வசனங்கள் ஏனைக்கடவுளர்பாற்சென்று முடிபெய்தாவாமென்க.

இனி 'நாராயணனொருவனே யிருந்தனன்' என்றற்றொடக்கத்தனவாக அவனுக்குப்பிரபஞ்சப்படைப்பைக்கிளந்துரைத்தவசனம் ஒருகற்பமுதலிற் பரமசிவன்பானின்று முதற்கட்டோன்றிய நாராயணன் தன்னையொழித்தொழிந்த பிரபஞ்சத்தினைப் படைப்பனெனக்கொண்டு பொருளியையச்செய்யற்

பாற்றாகலின், அஃதெவ்வாற்றானும் பரமசிவனுடைய முழு முதன்மையோடு முரணுமாறில்லை. மகோபநிடதத்தில் 'நாராயணனொருவனேயிருந்தனன்' என்பதற்குத் "தபோதுதனினின்றும்பிறந்தனன்" என்றற்றொடக்கத்து உபபிருங்கணாதிற்கேற்பச் சிருட்டியின்றொடக்கத்தில் பிரமன் உருத்திரன் முதலியோருதித்தற்கு முன்னர்த் துணையிலியாய் நாராயணன் பிறந்தானெனப்பொருள்படுதலானும், மகோபநிடதத்திற் பெறப்படும் பூதேந்திரியமுதலியவற்றின் சிருட்டி வரிசையின் அப்புவினிடையேபடைத்த ஒருபிரமாண்டத்து "நாராயணன் நான்முகனைப்படைத்தனன்" என்னும் பொருட்டொகுதி மஜுவகனைத்தொகுதிகளிலும் "மாபூதமுதலியவாகவேறுபடும் வீரியத்தையுடையான் பிறந்தனன்" என்றற்றொடக்கத்தனவாக அவ்வாறே கூறப்படுதலின் அவை அதனைமுகமாகக்கொண்டு அவ்வுபநிடதத்திற்கு உபபிருங்கணமாதல் தெளியப்படுதலானுமென்க. இங்ஙனஞ் சுருதிபுராணமுதலியவனைத்தோடு முரணாதவாறு பரமசிவன் சகத்திற்குக்காரணனாதல் காட்டப்படுதலின், அவனேபரப்பிரமப்பொருளாம். அற்றாகலினன்றே மந்திரம் "இருதம் சத்தியம் பரப்பிரமம்" என்றதூஉமென்க. 'விரூபாக்கன்' என்னுமபிதானச் சுருதியானும், கூர்மபுராணத்தில் "இருதஞ்சத்தியமென்னும்மந்திரத்தான்மாதேவனை ஈசானனையிறைஞ்சுக" வென்று சிவவணக்கத்தில் விநியோகிக்கப்படுதலானும், போதாயனசூத்திரத்தின் மாதேவனதுபாதோதகவிதியைக்கூறுதுமென்றெடுத்து "இருதஞ்சத்தியமென்னுமந்திரத்தாலாசமிக்க" வென்று சிவபாதோதகவிதியில் விநியோகிக்கப்படுதலானும், யோகயாஞ்ஞியவற்கியத்தில் "அன்றியுங் கார்க்கீபிரமபுரமாகிய தகரபுண்டரீகத்தினடுவே பரமான்மாவும் பரமானந்தவடிவனுங் குருவருளாலறியற்பாலனும் புருடனு நீலலோகிதனுமாயுள்ள பிரமப்பொரு

ளை யோகப்பயிற்சியினனே நல்லோர் பார்க்கின்றனர் நீயும் அவ்வண்ணஞ்செய்க'' வென்று முன்னேயனுவாகத்தால் விதிக்கப்பட்ட தகரவித்தையால் உபாசிக்கப்படுந் திருவுருவைக்காட்டி அதனேடொருவாக்கியப்படுத்திப் புலப்படுத்தலானும், இம்மந்திரஞ் சிவபரமாதல் வெளிப்படையாம்.

இனி ''நாராயணபரப்பிரமம்'' என்றதூஉம் நாராயணற்கு சிவபிரானேடுவேறுபாடின்மையைக்கொள்ளுங்கால் அவ்வாற்றுமுறு மாணுது. வேறுபாடுகொள்ளுங்கால் நாராயணன் பரப்பிரமப் பொருளைப்பாவித்து அதுவாயினனென்றுருற்றுமைசெய்க, ஒருவித்தையில்உபாசிக்கப்படுபவன்உபாசிப்பவனுதல்கொண்டு சுதந்திரனுகவும் பரதந்திரனுகவுங் கூறப்பட்ட விருவருக்கு உள்ளவாற்றுற் பரப்பிரமத்தன்மை செல்லாமைநேர்ந்துழி அங்ககுணவிரோதாதிகரண நியாயம்பற்றிப் பரதந்திரன்பால் அவனுந்தன்மையைக்கூறுதலேயோ முக்கியப்பொருளாகக்கோடலின்: ''அங்ககுண விரோதத் தங்கமே கொள்க—வதன்பொருட்டுக்குணமடுத்தலான'' வென்னுமதிகரணத்தில் ஓர்பகன்முதலாகத் தீக்ஷைசெய்துகொள்ளுமிடங்களில் தீக்கிணியை சோமயாகமென்னுமிரண்டற்கும் விதிவாக்கியத்திற் பெறப்படும் பர்வகாலஞ்சம்பவிக்கமாட்டாமையின் இரண்டனுளொன்றைத்தள்ளுதல் இன்றியமையாவிடத்துப் பிரதானத்தைக் கொள்ளுதல்பொருத்தமாதல்பற்றிக் குணமான தீக்கிணியையினையேதள்ளல் வேண்டுமென்று துணியப்பட்டது.

'நாராயணனினும் பரப்பிரமஞ் சிறந்தது' என்னும் பாசுபதவியாக்கியானத்தினுங் குற்றங்காண்கின்றிலம், பிரதானத்திற்கேற்பாண்டிவ்வாறுபொருடுணியப்பட்டுழி''நாராயணன்

பரப்பிரமம்" என்னுமற்றைச்சுருதிக்கே "வேற்றுமையுருபு கள்சுப்பெறுந்தொகுமே" என்னுஞ்சூத்திரம்பற்றிஐந்தாவதற் குச்சுவ்வென்னுமாதேசங்கற்பித்தல் பொருந்தமாகலின். இ லிங்கபுராணத்து மாலிங்கோற்பத்திக்குமுன்னர் பிரமநாராய ணர் தம்முண்முரணி 'நானேயனைத்திற்குமேலானேன்' என் று விவாதஞ்செய்யலுற்றுழி 'நானேபரப்பிரம'மென்றெடுத்த நாராயணவசனம்,"மாதேவனென் என்னைநோக்குக பயந்தவிர் கபேராற்றல்படைத்தநீயிர் என்வடிவிற்பண்டுதோன்றினீர் விண்டூஉ பிரமன்விண்டுசிவனென்னுங்குறிகளானும் தோற்ற நிலையிறுதியென்னுந்தொழில்களானும் அகளனும் பரமேசுர னுமானயானே மூவராகவேறுபட்டேன் விண்டூஉ மோகந்த விர்க" என்றற்றொடக்கத்து (அவர்விவாதத்தையொழித்தரு ளும் பொருட்டு மாலிங்கநடுவில் வெளிநின்ற) பசுபதியின் ற த்துவவுபதேசத்தானே பிரமன் றன்னுயர்ச்சிகூறியவசனத் தொகுதிபோல ஒழிக்கப்படுதலின், அவனுக்குப் பரப்பிரமத் தன்மையைநாட்டுதல்செல்லாதென்க. இவ்வாறுசுருதியிற்பெ றப்படுஞ் சிவபிரானது பரப்பிரமவியலினைச் சர்வஞ்ஞசிகாம ணியும் பகவனுமான வாதராயணாசாரியனும் பிரமமீமாஞ்சை யில் 'அங்குட்ட' வாக்கியஞ் சிவநாமமான ஈசானசத்தமுடை மைபற்றிப் பிரமபரமென்று துணிதலானும், மாபாரதத்தில் "முத்திடுந்தருமனென்பானறப்பெருந்தாருமுன்னிற்- பார்த் தனத்தாருவுக்கோ ரடிப்பெரும்பணையாம்வீமன்-சீர்த்திடுங்கி ளையாம்பூவுங்கனிகளுஞ்சேர்த்திசான்ற மாத்திரைமைந்தர்கண் ணன்விப்பிரர்பிரமமாத்தூர்" "தேவர்கடமக்குத்தெய்வம்வி ண்டுவிப்பிரர்க்குத்தெய்வம்- பாவகன்றானுமேலாம்பிரமமும்ப ணைத்தோண்மின்னார்க்- காவதோர்தெய்வங்காந்தனுழிருலூல குக்கெல்லா- மேவருந்தெய்வமாவாரந்தணரொன்பமேலோர்" என்றற்றொடக்கத்திடங்களிற்பிறிதொருபதத்தோடு சார்த்தா

[illegible] லானுங், [illegible] [illegible] யுறைமவெளியிட்டான். "முத்திநிந்தரும னென்பானறப்பெறுந்தாரு" வென்னுஞ்சுலோகத்திற்ச[illegible]ண ன்றுணைவலியினாலும்பிராமணராசிர்வாதத்தினாலும்பாண்டவ ர்க்கு வென்றியெய்திற்றென்பது வெளிப்படுதலின் அவரது வென்றிக்குக்காரணமானகண்ணற்கும் பிராமணர்க்குமிடை யே அவர்தம்மோடொபபவோராகவுருவகஞ்செய்யப்பட்டபிர பு[illegible]சந்தப்பொருடாலும் அவ்வியல்பிற்முகவேகோடற்பாற்று. அப்பொருடான்யாவனெனின்;— பாரிசேடவளவையானும் பொருந்துமாற்ருனும்அப்பொருள்சிவபிரானேயென்பது ஒரு தலையானுணரப்படும்; மோக்கதருமத்தில் "பண்டவன்றன் ஞன்முனிந்திடப்பட்டபகைஞனைச்சவட்டினைபற்றவ்- வண் டர்நாயகனையளப்பரும்பெருமையாதியையழிவிலாவரனைச் - செண்டையந்தடங்கணுமைப்பெருமாட்டிகேள்வனைத்தேவர் கட்டவை- மண்மோதரவானியதியினென்றுமேத்துதிபார்த்த னிமன்றே" என்றுபார்த்தனைநோக்கிக்கண்ணன்கூறியவசன த்தானும், அசுவமேதப்பிரகரணத்திற் "குருகுலத்தவர்க்கோர் மதலைபாய் தித்தகொற்றவேல்வேந்தனிகேண்மோ- வொருவுரு க்கேண்மையுடையநாமெல்லாமுவன்றிருவடிக்கன்பராவேம்- பெரிதுபற்றவன்றானருள்சுரந்தளிக்குநமக்கெலாம் பெருமை சேரவன்ற - னருளினாலவனிமுழுதுமோர்குடைக்கீழாளுமி வ்வரசியாமடைந்தேம்" என்றெடுத்துக் "காதுதல்வல்லவல் வில்லாண்டகைத்துரோணன்கன்ன- ஞதியர்தங்களாலேபுர ந்திடப்பட்டவப்பேர் - மாதிறற்சேனைதன்னைவல்லவில்லாளு ம்பல்வே-றோதுருவுடைமகேசனொருவன்மற்றன்றிமாதோ - மற்றெவன்மனத்தினானுந்தடுத்தெதிரேறுமாற்றல்- பெற்றவ னுளைத்தியந்தபலிறைபதிமுடித்தசோதிக்- கற்றையஞ்சடை யாதேவன்கருணையாற்றுனேயுன்றன்-பற்றலர்ப்படுத்துவாகை

புனைந்தனைபாராள்வேந்தே" என்றுஉதிட்டிரனைநோக்கி வீம
சேனன்கூறிய வசனத்தானும், பாத்மபுராணத்தில் "மாயமிக்
கயர்தரவல்லனாய்விண்டுகூ - றுயவக்கண்ணனாண்டமருமற்ற
ன்னவன்-மேயநம்மானையான்மேவியும்வயினுமக்- கேயபல்லு
றுதியும்மறிவுறுத்திடுமேரோ" என்றுவேட்டுருவிடுத்தசிவபிரா
ன்பார்த்தனைநோக்கி யருளிச்செய்தவசனத்தானும், சிவபிரா
னதுதிருவருளானே பாண்டவர்க்குவென்றியெய்திற்றென்னு
மிப்பொருள் தெள்ளிதிற்பெறப்படுதலானும், 'யாண்டறமு
ண்டு ஆண்டுவென்றியுளதா' மென அறம்வென்றிக்குமுலமா
தல் ஒருதலையான் எல்லாராலுமறியப்பட்ட தொன்றாகலின்
அதனை அறிவுறுத்துமுகத்தானே வென்றிக்குபாயமாம்வேதம்
பிரமசத்தப்பொருளாதற்கு இடனுளதாயினும்ஈண்டுச்சேதன
வுறுப்புக்கடம்மானேசாவயவவுருவகஞ்செய்தலின் ஈண்டை
ப்பிரமசத்தத்திற்குச் சேதனப்பொருள் இன்றியமையாதாக
லின் சத்சரூபமானவேதம் பொருளாதல செல்லாமையானு
மென்க. "தேவர்கடமக்குத்தெய்வம்விண்டு" என்றெழுந்த
சுலோகத்தின்கணுள்ள பிரமசத்தப்பொருளுஞ் சிவபிரானே
யென்பது இவ்வாறே துணியப்படும்; "வானவர்க்கொருநீபி
ராமணனைவை-மானவர்க்கியான்மன்பிராமணனேவேன்-பிராம
ணனையன்றே பிராமணன்வழிபடும்" என்றற்றொடக்கத்துச்
சாந்தோக்கியோபநிடதத்தும் "நிருபர்தெய்வமாநேமியிந்திர-
னரியவிப்பிரர்தெய்வமோங்கெரி- கிரணமாயிரங்கெழுமுசூரி
யன்-பிரமனேடுயர்பினாகதாரியே- அதலான்மிகுமுக்கத்தன்பு
ட-னேதுமீசமாயுகத்தையுற்றரோ- வாதிருத்திரவந்தனாளனே-
மேதினீசனைச்சரணமெய்துக" என்றற்றொடக்கத்தனவாகவரு
ங்கூர்மபுராணமுதலியவற்றின்கணுள்ளவசனங்களினுஞ் சிவ
பிரான் பிராமணத்தெய்வமாதலோதப்படுதலின். இவ்வாறுசி
வபிரான் பிரமப்பொருளாதறுணியப்படுதலின், பரசிவபிரா

ணினுமேம்பாடுடையனெனப் பிறிதொருகடவுட்குயர்ச்சி கற்பித்ததூஉம் அக்கடவுளாற் சிவபிரானுக்குச் சிருட்டிக்கப்படுதல் நியமிக்கப்படுதல்களைக் கற்பித்ததூஉமாயவெல்லாங் கருவற்றொழிந்தமைகாண்க.

"அங்கிகடவுளர்க்கவமன்விண்டுபரமன்" என்றற்றொடக்கத்துத்தீக்கிணீயையிணைக்குறிக்கும்அருத்தவாதமும்"மாறுபாடுறீனேகுணவாதமாகும்" என்னுநியாயத்தானேபுணைந்துரையாகவேனும் பிறிதொன்றாகவேனும்பொருத்துதற்பாலதாம். அற்றேல், அங்கியின்அவமத்தன்மையும்விண்டுவின் பரமத்தன்மையும் அவரொழிந்த வனைக்கடவுளரினிடையார்தன்மையும் வாய்மையாகாதவழி "அங்கிகடவுளர்க்கவமன்விண்டுபரமன்" என்று இருமருங்குள்வைத்துக் கடவுளரையெடுத்துத் தீக்கைபுரிகவென்றோதுந் தீக்கிணீயைக்குச் சோமத்தில்வேட்கப்படுங் கடவுளரெல்லாரையுங் கொள்ளுந்தன்மை பெறப்படாது; பெறப்படாதாகவே, "கோடற்பொருட்டாதானம் வேண்டு-முன்னையிட்டியதன்பொருட்டாகலின்" என்னுமதிகரணத்திற் சோமவேள்வியில் வேட்கப்படுங் கடவுளரைக் கொள்ளுதற்பொருட்டெழுந்த தீக்கிணீயையென்னும் வேள்வியாற்றானே *பிரசங்கம்பற்றி அங்கவேள்விகளிலுங்கடவுளரைக்கொள்ளுதல் பெறப்படுதலின் சோமாங்கவேள்வியிற் கடவுளரைக்கொள்ளுதற்பொருட்டு மறித்தும் அங்கியாதானஞ்செயற்பாற்றன்று" எனப்போந்ததுணிபுரைக்குஞ் சங்கிரகணகாண்டத்திற்றீக்கிணீயைவேள்வியை நிரூபித்து "அதன்றுப்பியையபினேனைக் கடவுளர்ச்-கைக்கொள்ளுதருன்கேட்க

* பிரசங்கமாவது முதற்கண்வந்தவாக்கியங் கூறுஞ்செயற்கட்டளைவறுக்கையடியில் ஆசிரியனையன்றியும் ஒருதலையாகவங்கனமட்டிடற்குரிய துயப்பின்வந்த மருகனுக்குமுபகாரமாதல்போல வொன்றனைப்பொருட்டுச்செய்தவினை மற்றொன்றற்குமுபகாரமாதல். இது சிவஞானபாடியத்துட்கண்டது.

ப்பரிசே. என்னுமதிகரணத்தில் "தீக்கிணீயையிற்கொள்ளப்பட்டகடவுளர்க்கு ஆரோபிதஸம்ஸ்காரஸம்யோகமுண்மையின் சோமவேள்வியிற் றீக்கிணீயையிலாதானுஞ்செய்யப்பட்ட வங்கி சோமப்பொருட்டோம்பப்படும் கருமந்தோறுமாதானம்வேண்டற்பாற்றன்று" எனப்போந்ததுணிபுரைக்கும்வாதையுண்டாம்பிறவெனின்;—அற்றன்று, "அங்கிகடவுளர்க்கவமன்விண்டுபரமன்" என்புழி வலியுடையவனேகசுருதிகளின் விரோதம் வருதலானும், உபசரிதப்பொருள் கொள்ளுமிடத்துந் தீக்கிணீயைவேள்விக்குக் கடவுளரைக்கொள்ளுதல் பயனுமென்னும்பொருட்கு விரோதமின்மைபற்றித் தன்பொருட்கட்பிரமாணமாதலொப்பப்படுதலானுமென்க. அஃதேல், அங்கிக்கும் விண்டுக்குந் தாழ்ச்சி உயர்ச்சி இலவழி இருமருங்குளடக்கிக்கொள்ளுதல் பெறப்படாமையின் கடவுளரல்லாரையுங்கொள்ளுதல் செல்லாதாலோவெனின்;—அற்றன்று, அவ்விருவர் தாழ்ச்சி யுயர்ச்சி வரம்புபற்றி அவர்தம்மைக்கொள்ளுதல்பெறப்படினும் அப்பேறின்மை அவ்வண்ணமே நிலையுதலின், தாழ்ச்சியுயர்ச்சியுடைய விருகடவுளர் வேள்விபற்றி அவரிடைப்பட்ட ஏனைக்கடவுளரைக்கொள்ளுதல் பெறப்படாமையினென்க. இனி வசனவலியானே இருபாலாரைக்கொள்ளுதல்பற்றி எல்லாக்கடவுளரையுங்கொள்ளுதல் பெறப்படுமெனின்;—அங்ஙனமாயின் வசனவலியானே அங்கிவிண்டுவென்பார் வேள்விகள்பற்றிக் கடவுளரல்லாரையுங்கொள்ளுதல் பெறப்படுமென்றும். "சூர்ப்பத்தானே யோமித்திடுக-வதனானன்றேயன்னமடப்படும்" என்புழிச் சூர்ப்பத்தின்கண் அன்னகரணத்தன்மை துதிபற்றியன்றி அஃதோமசாதனமானவன்னத்திற் குபயோகமாதல்பற்றியன்று; அதுபோல, அங்கிக்கும் விண்டுக்கும் அவமத்தன்மை பரமத்தன்மை கூறியதூஉந் துதிபற்றியன்றி ஏனைக்கடவுளரைக்கொள்

ளுதற் குபயோகமாதல்பற்றியன்றென்றுகொண்டு, விரோத ம் ானின்மையின்றென்க. இனி உண்மையாகநோக்குமவ ழி ஈண்டை 'அவம' 'பரம' சத்தங்கள், தாழ்ச்சி உயர்ச்சிகளை உணர்த்தவந்தனவல்ல. மற்றென்னையோவுணர்த்தவந்தனவெ னின்;—முடிவுமுதலுமுணர்த்த வந்தனவென்க; "அங்கிகட வுளர்தொகுதிக்கு முன்னைப்பிரதமன் விண்டு உத்தமன்" எ ன்று அக்கினியைக்கடவுளைக்கொள்ளுதலைப் பயனெ னறுணர்த்தற்கேயெழுந்த மந்திரத்தின்கணுள்ள 'பிரதமன்' 'உத்தமன்' என்னும் பதங்களான் அவ்வாறு வெளிப்படுதலி ன், ஈண்டை யுத்தமபதத்திற்குப் "பிரதமவிருக்கினைமுப்மு றைகூறுக" வென்புழிப்போலப் பிரதமபதத்தொடர்ச்சிபற் றி அதற்கு றுதலையாணகடைமைப்பொருள் போதலானும், "கடவுளர்கருப்பிரதமனை அங்கிவருக" "கடவுளரின்முகமு முதல்வனுமானவங்கி" "அங்கியைமுகமாகவுடையகடவுளர்" என்றற்றொடக்கத் தனேகமந்திரப்பிரமாணங்களில் அங்கிக்கு முதன்மைகூறப்படுதலின் 'அவம' பதத்திற்கு யாங்கூறிய பொருளே யமைமையாமையானுமென்க.

ட

இனி "அவனதுநெற்றியினின்று முக்கண்ணனுஞ் சூலபா ணியுமானபுருடன்றோன்றினன்" "இவ்விருவிபுதத்தலைவரும் என்னருள்வெகுளிகளாற்பிறந்தோர்" என்றற்றொடக்கத்துச் சுருதிமிருதிகளில் உருத்திரன் நாராயணனாற் சிருட்டிக்கப் படுதலைக் கூறியனவெல்லாம் ஓர்கற்பத்துச் சங்காரவுருத்திர வடிவானே அவன்பால்வெளிப்பட்டருளியதைப் பொருளா கக்கொண்டனவாம், "யானும் ஓர்கற்பத்திறுதியில் கோரவடி வோடு சூலபாணியாய்வெகுளிக்காலே உன்முகத்தின்கண்வெ ளிப்பட்டு உனக்குப்புத்திரன்போலாவேன்" என்று கூர்மபு ராணத்தில் உருத்திரன்நாராயணனுக்கு வரமளித்தலைக்கூறும்

ஷசனித்தானே அப்பொருள்புலப்படுதலின். "அந்தப்பிரபுவி னி அங்கத்தில் நீலலோகிதகுமாரன்றோன்றினன்" என்றற் றொடக்கத்து வசனங்களில் உருத்திரனுக்குப் பிரமன்பாற் றோற்றங்கூறியதூஉம் அவ்வாறு பிரமனுக்கு உலகசிருட்டி வி ருத்திசெய்தற்கேற்றதோர் உபாயங்காட்டி அருள்வழங்க அ வன்கண் வெளிப்பட்டருளியதைப் பொருளாகக்கொண்டதா ம, "பரமேசுரனாலேவப்பட்டுப் பிரமனுக்கனுசனான நீலலோ கிதமகேசன் அவனுக்குப் புத்திரனாய் அருள்பாலிக்கின்றான்" என வாயவ்வியசங்கிதையிற் கூறுதலானும், "முவாயிரவர் யில்லானு ஞானமுதலியவற்றையுடையானுந் தாரகமுதலிய ஞானங்களை ஏவுவோனும் அணிமாமுதலிய இயற்கை ஐசுவரி யங்களையுடையானும் பிரபுவும் வியாபகனுமானதேவன் சிருட் டியின்பொருட்டுப் பிரமனெற்றியின்கண் வெளிப்பட்டருளி னான்" என்று பாரதத்திற் கூறுதலானுமென்க. "இவ்விருவி புதத்தலைவரும்" "பிரமன்றனுமனுத்தக்கன்" என்றற்றொ டக்கத்தனவாக உருத்திரனுக்குப் பிறனுனியமிக்கப்படுதலைக் கூறுர்வசனங்களும், 'அரியின்வெகுளியிற்றோன்றினன்' என் னும் விசேடணத்தானும், 'தாணு' முதலியபதங்களானும், பிர மநாராயணர்பாற்றோன்றிய அமிசவிசேடவிடயமாகத் துணி யப்படும். 'தாணு' சத்தம் நான்முகன்பாற்றோன்றிய உருத்தி ராவதாரவிசேடநாமமாம், ஆதித்தபுராணத்து அவனையேசுட் டி "அன்றுதொட்டு விசுவான்மாவானவன் நல்லமக்களைப்பிற ப்பித்திலன் தாணுவைப்போலசைவற்றிருத்தல்பற்றித் தாணு வெனப்பட்டனன்" என்று ஆண்டுத்தாணுவென்னும்பெயர் க்கு நிர்வசனங்கூறுதலானும், மாபாரதத்தில் "எவ்வழிப்பூத நாதன் சிருட்டித்து" என்னுஞ்சுலோகத்தானே மைநாகத்து பாசிக்கப்படுஞ் சிவபிரானுடைய சந்நிதியைக்கூறி "நானு நா ராயணனும் பிரமனும் யமனும் தாணுவுமென்னுமைவரும் ப

ல்லாயிரம் யுகங்கள்செல்லப்பரமான்மாவையுபாசிக்கின்றும்" எனவ்ருமடுக்கசுலோகத்தில் அத்தாணுவினை உபாசிப்பவர் கோடியுட்சேர்ந்தோதலானும், இராசதருமத்தில் "சூலத்தைப் படையாகக்கொண்ட அப்பகவன் மறித்தும் எண்ணமுற்று ஒவ்வொருதொகுதிக்கும் ஒவ்வொருவனை நாயகனாக்கினன்" என்றோதி "அப்பிரபு மகான்மாவும் நித்தனும் மாதேவனும ஈசானனுமானவிசாலாக்கனே உருத்திரக்கடவுளைப்புரக்கச் செய்தனன்" என்று சிவபிரான் பிரயோச்சிருட்சேர்த்தலானும், 'தாணு' 'விசாலாக்கன்' முதலியபதங்களாற்கூறப்படு உருத்திரனுக்குப் பரமசிவனின்வேறான ஓரவதாரமூர்த்தித்தன்மை வெளிப்படுதலாலுமென்க.

'விசாலாக்க' பதத்தானுந் தாணுவேகூறப்படும், பிரமனுலியற்றப்பட்ட நீதிசாத்திரத்தையெடுத்துச்சுட்டிப் "பகவனுஞ் சங்கரனும் பல்வேறுருவனுஞ் சிவனுந் தாணுவும் உமாபதியுமானவிசாலாக்கன் அந்த நீதியை முன்னர்க்கைக்கொண்டனன்" என்று அவன்பால் அப்பதத்தைப்பிரயோகித்தலானும், அதல பின்பு "பண்ணிலாயிரமுருத்திரர்தோன்றுதற்கிடமாய்ப்-பண்ணவர்க்கொருதலைவனாய்ப்பகவனாய்நித்த-மண்ணுநாசமில்லாவுமிரீயுயிர்க்குயிராகுங் - கண்ணுதற்சிவன்யுகந்தொறுங்கட்டியவாயுள்- வரம்பின்றியேகுறைதலைத்திருவுள்மதித்துப்-பிரமனோதியபெரும்பொருளுடையவந்நூலை- யொருசுருக்கமாவோதலினது-விசாலாக்கப்- பெரியபேர்படைத்திட்டதிந்திரனதைப்பெற்றான்" என்று இராசதருமத்திற்றானே அவனாற்சுருக்கப்பட்டநீதிசாத்திரத்திற்கு 'வைசாலாக்க'மெனப்பெயர்தந்தோதுதலானுமென்க. இனிப்புராணமுதலியவற்றில் ஒரோவிடங்களில் 'உருத்திரன் நாராயணனானியமிக்கப்படும்" என்று கூறுய்வசனங்களில் அவதாரவேறுபாட்

டைக்குறிக்கும் பதமேனும் இலிங்கமேனும் இல்வழி ஆண்டுப் பரமசிவன் அவனுனியமிக்கப்படுதல் பொருந்தாமையானும், "அரிபுராணத்துமேளாதுமத்தாழ்வுதாந் - தெரியிலிந்தப்பரசிவ தேவனின்-வரும்விபூதிவுருத்திரயக்கணர்க்-குரியவாகுமொரு தலையாகவே" என்று வியாசபுராணததிற் கூறுதலானும், அமிசபேதவிடயமாதல் வச்சிரலேபமாக நாட்டப்படும் ஆகலின், முழுமுதன்மை அனைத்தையுமதிட்டிக்குந்தன்மை பிறனுனியமிக்கப்படாமைமுதலியகுணங்களையுடைய பரப்பிரமப்பொருள் பரமசிவனே யென்றற்கட் சுருதிமிருதிபுராணமுதலிய வெல்லாந் தம்முண்முரணமையின், அப்பரனே மேலான உறுதிப்பொருளைக்காதலிப்போரால் உபாசிக்கற்பாலனுஞ் சரணடையற்பாலனுமாம்; "காரணன்முன்றியானிக்கற்பாலன்" "எவன்பிரமனை" என்றற்றொடக்கத்துவசனங்களும் அவனையே உணர்த்துவனவாகலானும், "எவன்பிரமனை" எனவருஞ் சுவேதாச்சுவதரமந்திரமும் 'மாதேவனைஈசுவரனைஇருதஞ்சத்தியமுதலியமந்திரத்தாலிறைஞ்சுக' "எவன்பிரமனை" எனவருமந்திரத்தாலீசுரனிடத்தான்மாவையர்ப்பணஞ்செய்க" என்றுகூர்மபுராணத்துச்சிவபூசையில் விநியோகிக்கப்படுதல்பற்றிஅச்சிவபிரானைவிடயமாகவுடத்தாதல் வெளிப்படையாதலானும்,அதர்வசிகைமுடிவில்"ஏனையவற்றையெல்லாங்கைவிட்டுச்சுபத்தைச்செய்யுஞ் சிவபிரானொருவனே தியானிக்கற்பாலன் அதர்வசிகைமுற்றிற்று" எனமற்றையனவெல்லாவற்றையுமொழித்துச் சங்கரனை சிவபிரானுக்குத் தியானிக்கப்படுந்தன்மையைவிதித்து இனி உபதேசிக்கத்தக்கதில்லை என்று துணியும்பொருட்டு அப்பொருட்கட்டான்முடிவுறுதலைத் தானேகூறிநிலையுறுதலானுமென்பது.

வேதமொரு ஞானகோததிமேவநன்
நீதிமத்துநிறீஇத்திரித்துக்கடைந்
தாதரத்திற்சிவகர்ணவாரமிர்
திதெடுத்தனமிவ்வுலகுண்ணவே.

வேறு.

திரத்தினீண்டெடுத்தியம்பிடநியாயமாஞ்சிலையி
நுவரைப்பினின்மலமாகியவொப்பில்வேதாந்தப்
பருத்தமாமணித்தீபமிப்பாருளோர்காண
வரத்திஞேங்குபூதேசனைவிளக்குகமாதோ.

அருமுற்றவவித்திலுள்ளங்குரித்தெழுந்த
வாரருட்சிவபத்தியாங்கற்பவல்லியினைத்
திரர்சைவகர்ணமிர்தத்தீஞ்சொனீருகுத்துக்
கூருந்துன்மதிக்கோடையைமுருக்கியோம்புக.

வேறு.

நாமகள்கொழுநன்பரித்திடவவன்றனுவிடையமர்வதூ ளப், பூமகள்கொழுநன்றூஇப்பெரிதெய்தப்பொலிவது பொருவிலாழ்கவள, மாமதிமுடித்தசிவபிராணுடற்காடியி திவதூஉமான, தூமதிவிளக்காஞ்சொற்பிரமத்தைத் தேத்துதித்திறைஞ்சுதுமே.

சித்தாந்தமுற்றிற்று.

சிவகர்ணமிர்தமுற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

DR U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR :: MADRAS